# பொது மக்களின் நன்மைக்காகவே மலதிக சேவை கோரப்படுகிறது

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 1
இதழ்: 127

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 5 ரபி; ஆகி 3 வியாழக்கிழமை [19-6-69]

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 0

## இ. போ. ச. முகாமையாளர் அறிக்கை

நல்லூர், வியாழன்

'பிரயாணம் செய்யும் பொதுமக்களின் நன்மையைப்பொறுத்து மிக அத்தியாவசிமான தேவையின் பொருட்டே ஊழியர்கள் மேலதிக வேலை செய்வதற்கு கேட்கப்படுவர்.

கடமை முடிந்த ஊழியரை மேலதிக வேலைசெய்யும்படி பயமுறுத்துவதும், மறுத்தால் தண்டிப்பதும், நிறுத்தப்படவேண்டும் என்ற தொழிலாளரின் கோரிக்கைக்கு இ. போ. ச. பிரதேச முகாமையாளர் திரு கே. ஆர். வேலுப்பிள்ளை, மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்

பிரதேச முகாமையாளர் நேற்று வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், துரதிர்ஷ்டவசமாக இந்தஸ்தாபனத்தின் ஒருசில ஊழியர்கள் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவுற்றன என்றும் முறனும் முரணான பிரசாரத்தை தங்கள் சக ஊழியர்களிடம் பரப்பி அவர்களைப் பிழையான வழிகளில் இழுத்துச் செல்வதற்கு எத்தனிப்பது மிகவும் வருந்தத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில்மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தாமதமயம் சேவைக்கு விடப்பட்ட வாகனங்கள் நேரஅட்டவணையின்படி ஓடுவதற்கு போதக்கூடியதாய் இருக்கின்றபடியால், பொதுமக்கள் எங்கள் சேவையை மெச்சத்தொடங்கியிருக்கிறார்கள். இதே நிலைமையை நீடிப்பதற்கும் மிகச் சிறந்த சேவையை பொதுமக்களுக்களிப்பதும்தான் எங்கள் குறிக்கோளாகும்.

இந்த அறிக்கையில்தொழிலாளரின் 19 கோரிக்கைகளுக்கும் பிரதேச முகாமையாளர் பதிலளித்துள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில பதில்கள் வருமாறு: 6-6-69 தொடக்கம் ஊழியர்களின் வசதிக்கேற்ப பஸ்வண்டி கொடுக்கப்பட்டிருக்கிறது. 8.5-69-ல் இரு

(4-ம் பக்கம் பார்க்க)

## உப்புவெளியில் நடந்த கோர லொறி விபத்து

திருகோணமலை, புதன்

உப்பு வெளி கிறிஸ்தவ மாணவர் விடுதிக்கெதிரில் நடந்த கோரலொறி விபத்தில் 4 சிறுவர்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள். 1 சிறுமி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில அனுமதிக்கப் பட்டுள்ளார்.

வீதியால இறந்த சிறுவர்களும் காயமடைந்த சிறுவர்களும் வீடு சென்று கொண்டிருந்தபோது பின்னால வந்த லொறி இவர்களை மோதித்தள்ளிவிட்டு வயல வெளியில பாய்ந்ததாக சொல்லப்படுகிறது.

இறந்த இரு சிறுவர்களின் சடலங்கள் வாய்க்காலுக்குள் சின்னாபின்னமாக்கப்பட்டநிலையில் கண்டெடுக்கப்பட்டது. திருகோணமலை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. உடாளிவிஜரத்தின விசாரணை செய்து வருகிறார்.

# நாவலர் பெருவிழா: வடபகுதி பாடசாலைகளுக்கு 3 நாள் லீவு

## சிலை வழி அனுப்பு வைபவத்தில் பிரதமர் உரையாற்றுவார்

யாழ்ப்பாணம், வியாழன்

நாவலர் பெருவிழாவை முன்னிட்டு இம்மாதம் 30-ம் திகதியையும், ஜூலை 1-ம் திகதியையும், 2-ம் திகதியையும் வடபகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு ஓய்வுநாட்களாகவிடக்கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை சம்மதமளித்துள்ளார்.

மூன்று நாள் விழாவிலும் கல்லூரி மாணவர்கள் கலந்துகொள்ள வசதிசெய்யும் முகமாகவே ஆறுமுகநாவலர் சபையினர் இந்த ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இதுசம்பந்தமாக வடபகுதி கல்லூரி அதிபர்கள் அனைவருக்கும் மகாநாடொன்றைக் கூட்டித்தெரி செய்துள்ளது. இமமாநாடு இம்மாதம் 21-ம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. நாவலர் சபை பொதுச் செயலாளர் திரு எம். ஸ்ரீகாந்தாவும் இக்கூட்டத்துக்குச் சமுகம் கொடுப்பார்.

29-ம் திகதி போயாதினமாகவிருப்பதால் அன்று நல்லூரில் நடைபெறும் சிலை திறப்பு விழாவில் சுமார் 5000 மாணவர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றது.

(கா. நி.)

### பிரதமர் சொற்பொழிவு

கொழும்பு, வியாழன்

இம்மாதம் 24-ம் திகதி கொழும்பில் நடைபெறவி யனுப்பு வைபவத்தில் பிரதமர் திரு டட்லி சேனநாயக்கா கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்

24-ம் திகதி மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரை சிலை பம்பலப்பிட்டி இந்து கனிஷ்ட பாடசாலையில் பொதுமக்கள் பார்வைக்கு வைத்திருக்கும் வைபவத்திலேயே பிரதமர் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

25-ம்திகதி காலை கொழும்பிலிருந்து நீர் கொழும்பு வழியாக வரும் நாவலர் சிலை பவனி அன்று மாலை வவனியாவை வந்தடையும்.

26, 27, 28-ம் திகதிகளில் வடபகுதியில் சுற்றுலாவும், 29-ம் திகதி திறப்புவிழாவும், 30-ம், 1-ம், 2-ம்திகதிகளில் யாழ்நகரில் நாவலா மாநாடும், கலைவிழாவும் நடைபெறும்.

## பூட்டிய அறைக்குள் இளம் பெண் டாக்டரின் சடலம்

கொழும்பு, செவ்.

மட்டக்களப்பு அரசினர் ஆஸ்பத்திரி அறையொன்றினுள் அங்கு கடமையாற்றும் இளம் பெண் டாக்டரின்சடலமொன்று நேற்று கண்டெடுக்கப்பட்டது. உடலைப் பரிசோதிக்கும் கிளினிக்கின்பூட்டியிருந்த அறையொன்றில் இச்சடலம் கிடந்தது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி வீரசிங்கமேஇவ்வாறு இறந்தவராவார். ஆஸ்பத்திரிகு வேலைக்குச்செல்லாததால் இவர் குடியிருக்கும் வீட்டில் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் விசாரித்தனராம். அப்போது அவர் யாழ்ப்பாணம் போய்விட்டதாக அங்கே அறிவிக்கப்பட்டதாம்.

போயாதினத்தையும், அதையடுத்த விஷேட விடுதலை நாளிலும் உடலைப் பரிபோதிக்கும் அறை பூட்டியிருந்ததால் வேறு திறப்பு மூலம் அந்த அறைக்கதவை நிர்வாகத்தினர் திறந்தபோதே 22வயதான செல்வி வீரசிங்கம் இறந்துகிடப்பது தெரியவந்தது

இவரது மரணம் பற்றி வேறெந்த தகவல்களும் இதுவரை தெரியவில்லை. தொடர்ந்து புலன்விசாரணை நடக்கின்றது.

**மாவிட்டபுரம்**

## தடை உத்தரவு வழக்கு இம்மாதம் 27-ல் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

மாவிட்டபுரம் தங்கசாமி அவருக்கு உரிமையில்லையென்றும் தீர்ப்பு வழங்க

# பரந்தன் ரசாயன தொழிற்சாலை ஊழியர் சிலர் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், வியா

பரந்தன் ரசாயன தொழிற்சாலையைச் சேர்ந்த சுமார் 150 தொழிலாளர்கள் கடந்த 3 தினங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 136 ஊழியர்களும் தமிழ்காங்கிரஸின் ஆதிக்கத்திலுள்ள பரந்தன் ரசாயன தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த 20 ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

யு. என். பி.யின் ஆதிக்கத்திலுள்ள தேசிய தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த10 ஊழியர்களும் நாளாந்த ஊதியம் பெறும் 80 ஊழியர்களும் தற்பொழுதுவேலை செய்து வருகின்றனர்.

சிங்களத் தேர்ச்சி பெறாத ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென்பது இவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும். வேலைமதிப்பீடு; எல்லாப்படிகளும் அடங்கியசம்பளம் விசேஷ வாழ்க்கைப்படி ஊதியம்; வருடாந்த சம்பள உயர்வுக்குள்ள யவை மற்றும் கோரிக்கைகளாகும்.

இக்கோரிக்கைகள் சம்பந்தமாக கைத்தொழில்மந்திரி திரு. பிலிப்குணவர்தன, இம்மாதம் 1-ம் திகதி யூனியன் பிரதிநிதிகளை அழைத்துப்பேச்சு வார்த்தை நடத்தினர் கோரிக்கைகள் சம்பந்தமாக மந்திரியிடமிருந்து 14 ம் திகதிக்குள் எவ்வித பதிலும் கிடைக்காததால் இரண்டு தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனவென்று தெரிவித்தனர்

இவ்வேலை நிறுத்தத்தால தினமும் உற்பத்தி செய்யப்படும் 3 தொன் குளோறினும், 4 தொன் எரிசோடாவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனல் வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையில் காகிதம் பிளிச்பண்ண பாவிக்கப்படும் குளோறினுக்கும் கொழும்பு மாநகரசபையிலும் மற்றும் உள்ளூராட்சி மன்ற குடிதண்ணீருக்கு பாவிக்கப்படும் குளோறினுக்கும் விரைவில் தட்டுப்பாடு ஏற்படலாமெனவும் கருதப்படுகிறது. இந்த வேலைநிறுத்தத்தால் சவுக்கார உற்பத்தியும் பாதிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கச்செயலாளர் திரு பாலாதம்பு இம்மாதம் 23-ம் திகதி பரந்தனுக்கு வருகின்றார். அவர் வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களைச் சந்திப்பார். கொழும்பிலுள்ள பரந்தன் ரசாயன கூட்டுத்தாபன தலைமைக்காரியாலயத்தில் உள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த 26 ஊழியர்களும் வேலை நிறுத்தம் செய்துள்ள

(4-ப் பக்கம் பார்க்க)

## ஜெய்சங்கர் திருமணம்



களும் வந்திருந்து தம்பதிகளை வாழ்த்திச் சென்றனர் ஆயிரக்கணக்கான ரசிகர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடை உத்தரவு வழக்கு இம்மாதம் 27-ல் தீர்ப்பு

யாழ்ப்பாணம், புதன் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தடைஉத்தரவு வழக்கு தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனுப் இஸ்மயில் நேற்றுக்காலை தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 27-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இவ் வழக்கில் எதிர் மனுதாரான சுந்தரலிங்கம் ஆலயத்திற்கு செல்ல விடாமல் தன்னை தடுப்பதாகவும் அப்படித் தடுப்பதற்கு அவருக்கு உரிமையில்லையென்றும் தீர்ப்பு வழங்கக்கோரி ச. கணேசன் மனு தாக்கல் செய்திருந்தார்.

எதிர் மனுதாரான சுந்தரலிங்கம் நேற்று நீதிமன்றத்துக்கு வரவில்லை மனுதாரான கணேசன் வந்திருந்தார்

தீர்ப்பை அறிவதற்கு நேற்று கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

# புகைபிடிப்பதை நிறுத்த 'டெலிபோன்' உதவி

மேற்கு பெர்லின், ஜூன் 18 'சிகரெட் புகைக்கும் பழக்கத்திலிருந்து விடுதலை' பெறுவதில் டெலிபோன் மூலம் உதவிசெய்ய, மேற்கு பெர்லின் நகரில் வசதிசெய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட டெலிபோனில் தொடர்பு கொண்டதும், பதிவுசெய்யப்பட்ட இனிய குரல் உங்களை வரவேற்கும். புகைபிடிப்பதை படிப்படியாகக் குறைத்துப் பின்னர் கைவிடுவதற்கான வழிமுறைகளை அக்குரல் எடுத்துரைக்கும். 'உறுதியைத் தளரவிடாதீர்கள்; சிகரெட்குடிப்பதை கைவிடும்போது சாப்பி, தேநீரை அளவுக்கு மீறி அருந்தாதீர்கள். பழச்சாறு அல்லது தண்ணீர் அருந்துங்கள். சிகரெட்டினை மறக்க நீண்டதூரம் நடந்து செல்லுங்கள்" என்று அந்த இனிய குரல் பக்குவமாக எடுத்துச்சொல்லும். இக்குரலைக் கேட்டுத், திருந்தியவர்களும் உண்டு. சிகரெட் பிடிப்பதை குறைத்துக் கொண்டவர்களுமுண்டு.

# ஈழநாடு 10-வது ஆண்டு

## விழாவை யொட்டி நடைபெற்ற

- ★ விளையாட்டுப் போட்டிகள்
- ★ அலங்கார, வர்த்தக ஊர்வலம்
- ★ வினோத உடைப் போட்டி
- ★ இலக்கியப் போட்டிகள்
- ★ மர்ம மனிதன் போட்டி
- ★ பேச்சுக் கட்டுரைப் போட்டிகள்
- ★ கலை நிகழ்ச்சிகள்
- ★ வாணவிளையாட்டுகள்

ஆகியவை பற்றிய சுவையான தகவல்களையும் மறக்க முடியாத சம்பவங்களையும் அந்தந்த, நிகழ்ச்சிகளின் அமைப்பாளர்களாகவிருந்த திரு. ஏ. பாலசிங்கம் (யாழ் மத்திய கல்லூரி), திரு. வி. ரி. கணேசலிங்கம் (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), திரு இ. கே. குமரையா (யாழ். அரசாங்க செயலகம்), திரு என். பாலசுப்பிரமணியம் (யாழ். மாநகரசபை), திருமதி பி. குகதாசன் (வடபகுதி கல்வித் திணைக்களம்), திரு. இ. மகாதேவா (யாழ். இந்துக் கல்லூரி), திரு. எஸ். திருச்செல்வம் (ஈழநாடு) ஆகியோர் 'ஈழநாடு' தினசரியில் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

**உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!**

ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

இதுசம்பந்தமாக வடபகுதி கல்லூரி அதிபர்கள் அனைவருக்கும் மகாநாடொன்றைக் கூட்டித்தெரிவிக்க நாவலர் சபை முடிவு

பிரதமர் சொற்பொழிவு

கொழும்பு, வியாழன் இம்மாதம் 24-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் நாவலர் சிலை வழி 26, 27, 28-ம் திகதிகளில் வடபகுதியில் சுற்றுலாவும், 29-ம் திகதி திறப்புவிழாவும், 30-ம், 1-ம், 2-ம்திகதிகளில் யாழ்நகரில் நாவலா மாநாடும், கலைவிழாவும் நடைபெறும்.

# வடக்கின் அநகாரிக தர்மபால நாவலர்

## சிங்கள, ஆங்கிலமொழிகளில் பிரசுரம்

கொழும்பு, வியாழன் வடக்கின் அநகாரிக தர்மபாலா நாவலர் பெருமான்தான் என்று தெரிவிக்கப்பட்ட இரண்டு ஆண்டுப் பிரசுரங்களை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும், நாவலர் சபை நேற்று வெளியிட்டது.

தமிழ் தெரியாத மக்களுக்காக வெளியிடப்பட்ட இத் துண்டுப்பிரசுரத்தில் தென்னிலங்கையில் அநகாரிக தர்மபால எப்படி பிரபல்யமாக விளங்கினாரோ அவ்வாறே வடக்கிலும் நாவலர் பெருமான் விளங்கினார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

நாவலர் பெருமானுக்கு விழா எடுப்பதன் அவசியம் பற்றியும் இங்கு முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "'ஸ்ரீலஸ்ரீ'யை நாவலரே ஏற்றுக்கொண்டார்"

கொழும்பு, வியாழன் "சைவத்துக்கும் தமிழுக்கும் அயராது தொண்டாற்றிய நாவலர் பெருமானை இன்றைய பிரச்னைக்குள் இழுத்து அவரது பெயரில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடாது."

நேற்றுக்காலை நாவலர் விழா சம்பந்தமாக நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் திரு. எம். ஸ்ரீகாந்தாவும், திரு. மு சிவசிதம்பரம் எம். பி. யும்இந்த வேண்டுகோளை விடுத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ என்ற பெயரை மாற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இவர்கள் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:

நாவலர் பெருமான் உயிரோடு இருக்கும்போதே 'ஸ்ரீலஸ்ரீ' என்ற பெயரை ஏற்றுக்கொண்டார். 'ஸ்ரீலஸ்ரீ' என்பது ஒரு லட்சம் 'ஸ்ரீ' க்குச் சமனாகும். இதனை மாற்றினால் இது போன்ற கருத்துள்ள, பெறுமதியான ஒரு தமிழ்ச் சொல்லைப் பெறமுடியாது. இதன் கருத்தையும் வெளிப்படுத்த முடியாது.

எனவே இச்சொல்லை மாற்றி, நாவலர் பெயரை பிரச்னைக்குரியதாக மாற்ற வேண்டாம் என்றும் இவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

செனட்டர் ரி. நீதிராஜா, திரு. என். இரத்தினசபாபதி ஆகியோரும் இங்கு சமுகம் கொடுத்திருந்தார்கள்.

# 'முஸ்லிம்களின் ஐக்கியமே பெருமானார் காட்டும் வழி'

யாழ்ப்பாணம், புதன் 'யாழ்ப்பாண முஸ்லிம் வவனியா முஸ்லிம், கொழும்பு முஸ்லிம் என்ற வேற்றுமை முஸ்லிம்களிடையே இருந்து வருவதால் முஸ்லிம்கள் தமது முன்னேற்றத்தை தாமே தடுப்பவர்களாகவே இருப்பார்கள். எம்பெருமானார் ரசூலே ஹரிம் சல்அல்லாகு-அலைகு வசல்லம் அவர்கள் அகில உலத்திலும் வாழக்கூடிய முஸ்லிம்கள் ஐக்கியமாக ஒரே இறைவனின் கீழ்வாழ்வதற்கு தனது போதனையில் உலக முஸ்லிம் மக்களுக்கு கூறியிருக்கிறார். அந்தப்பாதைதான் இஸ்லாமியபாதை திருகுர்ஆனின் மூலம் நாங்கள் இவற்றைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு யாழ். மாநகர சபை 21-ம் வட்டார உறுப்பினர் ஜனுப் எம். ஜி. பசீர் தண்ணீரூற்று இஸ்லாமிய கலாச்சார இயக்கத்தின் சார்பில்நடைபெற்ற மீலாத் விழாவில் பேசுகையில் கூறினார்.

மௌலவி அ. அ. ஹமீது தலைமையில் விழாநடைபெற்றது அல்ஹாஜ் என். எம். முகமது மீரான் முய்தீன் ஆலிம், ஜனுப் எம் ஏ. சி. எஸ். ஏ. காதர், ஜனுப் அகமது, ஜனுப் எம். ஐ. நயீம் உட்படப்பலர் பேசினர்.

— —

# இன்று பரீட்சை

வெள்ளவத்தை, வியா. இலங்கை தொழில்நுட்பக் கல்வித்துறைகளுக்கான அனுமதிப் பரீட்சை இன்றும் நாளையும் நாடு பூராவும் நடைபெறவிருக்கிறது.

யாழ்ப்பாணம் கனிஸ்ட தொழில்நுற்ப நிலையத்துக்கு மாத்திரம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்துள்ளாராம்.

...மீனைப்பது இவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும். வேலைமதிப்பீடு; எல்லாப்படிகளும் அடங்கியசம்பளம் விசேஷ வாழ்க்கைப் படி ஊதியம்; வருடாந்த சம்பள உயர்வுக்குள்ள தடையை நீக்குவது ஆகி

# 'பிரதான வீதி வழியாக மின்சாரம் விநியோகிக்கவும்'

மட்டுவில், புதன் "இப்பகுதி மக்களின் நீண்டகால வேண்டுகோளின் பிரகாரம் மின்சாரப்பகுதியினர் அமுலாக்க முன்வந்த மட்டுவில் மின்விநியோகத் திட்டத்தை வரவேற்கிறோம். அதே சமயம் இத் திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் சாவகச்சேரி கிராமசபை, பிரதான வீதியைத் தவிர்த்து, புதிதாகப் போக்குவரத்துக் குறைந்த, குடிசன நெருக்கமற்ற ஒரு பாதையால் மின்சார விநியோகத்தை ஏற்படுத்த எடுக்கும் முயற்சியை உடன் நிறுத்தும்படி வேண்டுகிறோம். சாவகச்சேரி கிராமசபையின் நியாயமற்ற கோரிக்கையை நிராகரித்து, மின்சார விநியோகத்திற்கான முற்பணம் செலுத்தியவர்களின் கோரிக்கையை ஏற்று பிரதான தெருவான நுணாவில்- கனகன்புளி தெரு வழியாக தங்களின் மின்விநியோகத் திட்டத்தை அமுல்படுத்தும்படி வேண்டுகிறோம்" எனக்கோரும் தீர்மானம் மோகனதாஸ் சனசமூக நிலைய நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி. பி. டி. சில்வா உட்பட சம்பந்தப்பட்ட பகுதி அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

எந்தவித திட்டங்களையும் உருப்படியாக நிறைவேற்ற இயலாதவர்கள் மின்சாரப் பகுதியினர் முன்வந்து உதவும் திட்டங்களையும் குழப்பியடித்து இறுதியில் எதுவும் நிறைவேறாத நிலைக்கு மட்டுவில் மக்களை ஆளாக்கும் முயற்சியில் சாவகச்சேரி கிராமசபை ஈடுபட்டுள்ளதை மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். கிராமசபை தமது ஒருசில அங்கத்தவர்களின் சுயநல தேவைகளைப்பூர்த்தி செய்வதை நிறுத்தி முழுக் கிராமத்தின் முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடும்படி வேண்டுகிறோம்" என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

— —

## 'கட்டாய பாடமாக போதிக்கவேண்டும்"

சுழிபுரம், புதன் "உடல் வளர்ச்சியில்தான் உள்ளத்தின் வளர்ச்சியுண்டு ஆசிரியர்களும் மாணவர்களும் தமது ஓய்வுநேரத்தை உடற்பயிற்சி விளையாட்டுக்களில் செலவுசெய்யவேண்டும் ஒவ்வொரு பாடசாலையிலும் உடற்பயிற்சி கட்டாய பாடமாகப் போதிக்கப்பட வேண்டும்" என கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிக்கு பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட நல்லூர் கலாசாலை அதிபர் திரு. எஸ். கந்தையா பேசுகையில் குறிப்பிட்டார். விழாவுக்கு கலாசாலை அதிபர் எஸ். விசுவலிங்கம் தலைமைவகித்தார்.

# ஜெய்சங்கர் திருமணம்



சென்னை, ஜூன் 18 தமிழ் நாட்டின் பிரபல நடிகர் ஜெய்சங்கரின் திருமணம் இன்று காலை பத்து மணியளவில் திருப்பதியிலுள்ள தோளப்ப சத்திரத்தில் நடந்தது. கல்லூரி மாணவியான கீதாவை வைதீக முறைப்படி, 'ஜெய்' மணந்து கொண்டார்.

'ஜெய்'யின் திருமணவைபவத்துக்கு தென்னிந்திய திரைப்படவுலகைச் சேர்ந்த நடிக நடிகையடும், பிரமுகர்களும், அரசியல் தலைவர்களும் வந்திருந்து தம்பதிகளை வாழ்த்திச் சென்றனர் ஆயிரக்கணக்கான ரசிகர்களும் உள்ளேயும், வெளியேயும் திரண்டிருந்து 'அன்புத்தொல்லை' கொடுத்துக் கொண்டிருந்தனர்.

தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானகிராமணியார் தன் வீட்டுத் திருமணம் போல் நின்று கொண்டு வருபவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தார். 'ஜெய்' ம. பொ. சி. யுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர். சில வருடங்களுக்கு முன்னர் ம. பொ. சி. யுடன் ஜெய்சங்கர் இலங்கை வந்து சென்றது ரசிகர்களுக்கு நினைவிருக்கலாம்.

திருமண வைபவத்தில் பாலமுரளி கிருஷ்ணாவின் பாட்டுக் கச்சேரி இடம் பெற்றது. 'ஜெய்' தம்பதிகள் தேன் நிலவைக் களிக்க இம்மாதம் 20-ம் திகதி காஷ்மீர் போகிறார்கள். 5 நாள் அங்கு தங்குவார்கள்

கிளிநொச்சி தீ விபத்து

# 'ஈழநாடு' ஆதரவுடன் நிவாரணநிதி சேகரிப்பு

கிளிநொச்சியில் நடைபெற்ற தீவிபத்தில் உடமைகள் சகலதையும் இழந்து அனாதரவாக நிற்கும் ஏழைக் குடும்பங்களுக்கு 'ஈழநாடு' பத்திரிகையின் ஆதரவுடன் நிவாரணம் வழங்க முன்வந்திருக்கிறார்கள் கிளிநொச்சிப் பகுதி மக்கள்.

1958-ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்தின்போது உடமைகளை இழந்து கிளிநொச்சியில் குடியேறியவர்களில்பன்னிரண்டுகுடும்பத்தினர் இத் தீவிபத்தால் தங்கள் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை இழந்த நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் வாழ்க்கையில் மீண்டும் ஒளிபிறக்கச் செய்ய 'ஈழநாடு' ஆதரவுடன் நிதிதிரட்டும் பணியில் பல அன்பர்களும், பிரமுகர்களும் இப்போது ஈடுபட்டுள்ளனர்.

இதற்கெனத் தெரியப்பட்ட நிவாரணக் குழுவின் தலைவராக கிளிநொச்சி உதவி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. எஸ். டி. சில்வாவும், இணைச் செயலாளராக திருவாளர்கள் க. கிருஷ்ணபிள்ளையும், நா. சோதிநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். கிளிநொச்சி எம் பி பண்டிதர் இரத்தினத்தின் வேண்டுகோளின் படி இந்த நிவாரணக் குழு அமைக்கப்பட்டது.

பணமோ, பொருளோ வழங்கவிரும்புபவர்கள் திரு. க. ச. கந்தையா (குழுப்பொருளாளர்) பட்டண சபைத் தலைவர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

நிவாரண உதவி புரிபவர்களது பட்டியல் 'ஈழநாடு' பத்திரிகையில் தொடர்ந்து வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

தேவன்ஸ் தயாரிப்புகளை தயார் செய்வதற்கு பெண் பிள்ளைகளும், விற்பனைசெய்வதற்கு ஆண்களும் தேவை. நேரில் வரவும் 'தேவன்'ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1038

பத்திரிகைக் கடையில் கடமையாற்றுவதற்கு ஆங்கிலம் வாசிக்கக்கூடிய வாலிபர் இருவர் தேவை. வயது 16 — 21. நேரில் வரவும். எவ். ஏ. எஸ். நியூஸ் சென்ரர், 4, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். 1042

நன்நடத்தையும் தகுந்த கல்வியறிவுள்ள வரும் கோயிற்குருக்கள் சேவைக்கு முழுத்தகுதி வாய்ந்தவருமான பிராமணவம்ஷத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து கொழும்பு நகரிலுள்ள ஓர் கோயிலில் சேவைபுரிய ஒருவர் தேவை. தேர்ந்தெடுக்கப்படுபவர் வசிக்க வீட்டு வசதியுண்டு. மனுவுடன் மனுதாரை நன்கு அறிந்த இரு பிரமுகர்கள், அவர்களின் தொழில், விலாசம் முதலியன அறிவிக்கவும். இதற்குமுன் கோயிலிற் சேவை எதுவும் இருப்பின் சேவைக்காலத்துடன் கோயிலையும் குறிப்பிடுக. நேர்முகச் சம்பாஷணையின்போது சம்பளம் நிர்ணயிக்கப்படும். இதற்கான பயணச் செலவு கொடுக்கப்பட மாட்டாது. இப்பிரசுர நம்பரைக் குறித்து பத்திராதிபர் மூலம் 30-6-69-க்கு முன் மனுச் செய்க. விளம்பர இல. 1031, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1031


# இலங்கைப் பிரமுகருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

பிரபலஎழுத்தாளரும் பத்திரிகையாளரும், ஆராய்ச்சி அறிஞருமான திரு. வி. வி. இராசேந்திரம் அக்டோபர் 29-ம் திகதியிலிருந்து 31-ம் திகதிவரை கல்கத்தாவில் நடைபெறும் அகில பாரத கீழைத்தேசஇயல் மகாநாட்டில் 25-ம் ஆண்டு வெள்ளி விழாக் கூட்டத்தொடருக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பண்டைக்கால தமிழ்மக்களின் சமூகவாழ்வும் சங்க இலக்கியங்களில் அதன்பிரதிபலிப்பும் பற்றி உரை நிகழ்த்துவார். (கா. நி.)


ராணி
(யாழ்ப்பாணம்)

# அடைவு நகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி, 223 இலக்கக் கடையில் சோம. மு. இராமநாதன் அவர்களிடம் 1-1-64 தொடக்கம் 31-12-65 வரைக்கு வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவற்றை 9-7-69 புதன் கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 1609

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ந்து காண்பிக்கப்படுகின்றது.
15 - வது தினம்
ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 2-30, 6-30, 9-45.
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
தங்கை

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா நடித்த
நான்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Pre-Poya, Poya 4 Shows
James Coburn, Jean Hale
in
IN LIKE FLINT
(Cinemascope Color)

MANOHARA
JAFFNA
Daily 4 Shows
YUL BRYNNER as the
Double Man
The Best Thriller - 1968

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி

# லொறிச்சாரதி தேவை

கட்டைவேலி ப. நோ. கூ. ச. சமாசத்திற்கு ஒரு லொறிச் சாரதி தேவை. கீழ்க்காணும் தகைமைகளைக் கொண்டோர் மாத்திரம் விண்ணப்பஞ் செய்யலாம். விண்ணப்பங்கள் 1-7-69க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால்மூலம் காரியதரிசி, கட்டைவேலி ப. நோ. கூ. ச. சமாசம், கரவெட்டி. என்று விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரங்களை மேற்படி சமாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## தகைமைகள்

1. வயது: 1-7-69ல் 25 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. அனுபவம்: 5 வருடங்களுக்குக் குறையாத சேவை அனுபவம் இருக்கவேண்டும்.

3. பிணை: ரொக்கப் பிணை ரூபா 1000-00.
ஆதனப்பிணை ரூபா 5000-00.

4. நற்சான்றுப்பத்திரங்கள்: அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றுப்பத்திரங்கள் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். இவற்றுள் ஒன்று கடைசியாகக் கடமையாற்றியவரிடமிருந்து பெறல் வேண்டும்.

5. வேதனம்: சம்பளக் கட்டுப்பாட்டுச்சபையின் சட்டப்படி வேதனம் வழங்கப்படும்.

காரியதரிசி,
கட்டைவேலி ப. நோ. கூ. ச. சமாசம்,
கரவெட்டி.
1614 12-6-1969.


# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

## வியாழன் 19—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

# இன்றைய பலன்

ஆனி மாதம் -5ம் திகதி 19-6-69

மேஷம்- கடமையில் ஆர்வம் பிறக்கும், இதன் மூலம் புதிய பாதை திறக்கும் வெளியிடத் தொடர்புகளில் நல்ல திருப்பம் ஏற்படும்.

ரிஷிபம்- வரவில்உயர்வு காணும். வாழ்க்கையில் முன்னேற்றம்தென்படும். அயலவர்களின் வாழ்த்தும் அவசியம் கிடைக்கும்.

மிதுனம்- அற்பவிடயத்துக்கும், ஆத்திரமடைவீர். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம். அடக்கம் வேண்டும்.

கடகம்- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயபாரம் வேதனைப்படுத்தும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம்.

சிம்மம்- எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும். சிலருக்குத் திடீர் திரவிய லாபமும் கிடைக்கும். கலகலப்பானதினம்.

கன்னி- ஆசையின் பிடியில் அலைமோதும் நெஞ்சம். வேண்டாத நடவடிக்கைகள் உங்களை விபரீதத்தில் மாட்டி வைக்கும். நிதானம் நன்று.

துலாம்- அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவுமுண்டு.

விருச்சிகம்- வானம்பாடி போல் கானம் இசைப்பீர், வாழ்விலும் ஒளிவீசும் முதியவர் ஒருவர் உமக்கு நல்வழி காட்டுவார்.

தனுசு- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல் நலத்தைப் பேணவும்.

மகரம்- குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும். பிரம்மச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்பும். நல்லநாள்.

கும்பம்- கடமையில் தடை ஏற்படும். கால தாமதத்தால் பொருட் செலவு உண்டாகும். பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும்.

மீனம்- தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பும் கிடைக்கும். சுமுகமான நாள்.

— சோதிடக்கலாநிதி —

உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# வல்வை கோஷ்டியை கிறீன்பீல்ட் வென்றது

யாழ்ப்பாணம், வியா.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால், யாழ். மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்களிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இரண்டு கிழமை இடைவேளையின் பின் மீண்டும்கோட்டை மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்கும், வல்வெட்டித்துறை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில், கிறீன்பீல்ட் வெற்றி பெற்றது.

ஆட்டம் தொடங்கி இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் விளையாடி கோல்கள் எதுவும் போடாமல் இருந்தன. இடைவேளையின் பின், வல்வெட்டித்துறை கோஷ்டி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டது. இதன்பின் கிறீன்பீல்ட் கோஷ்டியினர் மிக வேகமாக விளையாடி அடுத்தடுத்து மூன்று கோல்களைப் போட்டன. இவைகளை இக் கோஷ்டியின் முன்னணி வீரர்களான சில்வஸ்டர்-2, ஜோர்ஜ்-1 ஆகப் போட்டனர். ஆட்டமுடிவில், கிறீன்பீல்ட் கோஷ்டியினர் 3—2 கோல்களால் வெற்றி பெற்றனர்.

கோட்டை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே. நி)

# யாழ். பாடசாலை ஹொக்கி சுற்றுப்போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வியா.

கல்லூரிகளுக்கிடையிலான ஹொக்கி விளையாட்டு போட்டி தற்போது யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது யாழ். ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் இவ் ஹொக்கிச் சுற்றுப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்று வருகின்றது. இதுவரை நடைபெற்ற இப் போட்டிகளின் முடிவுகள் சில பின்வருமாறு:

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. 'ஏ' பிரிவுப் போட்டியிலும் யாழ்ப்பாணக் கல்லூரி 6—0 கோல்களால் வெற்றி பெற்றது.

## கனகரட்ணம் ம. ம. வி. வெற்றி

கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும், யாழ். மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், 'பி' பிரிவில் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் 2—0 கோல்களாலும், 'ஏ' பிரிவில் 2—1 கோல்களாலும் வெற்றி பெற்றது.

## வெற்றி தோல்வி இல்லை

யாழ். மத்திய கல்லூரிக்கும், காரைநகர் கடற்படை கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான ஹொக்கிப் போட்டியில், இரு கோஷ்டிகளும் ஆட்டம் முடிவடையும்வரை கோல் எதுவும் போடாமையால், போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (தே. நி)

# 'வளர்மதி' வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

வடமாகாண மென்பந்துச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'மென்ப

சாவகச்சேரி, கிளிநொச்சி, கோப்பாய்

# நாவலர் நினைவுதின பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

நாவலர்விழாவை முன்னிட்டு வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்டுவரும் பேச்சுப் போட்டியின் முதல் தேர்வுக்கான கிளிநொச்சி சாவகச்சேரிப் பகுதி கோப்பாய் பகுதிகளுக்கான போட்டிகள் கடந்தவாரம் நடைபெற்றன.

கிளிநொச்சி, சாவகச்சேரிப் போட்டி முடிவுகள்.

ஆண்கள்

1 க. சிவராசா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

2 ந செல்வராசா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

3 செ துரைசிங்கம்(வரணி மகாவித்தியாலயம்)

பெண்கள்:

1 சுப்பையா திலகவதி (மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்)

2 சிவநாராயணமூர்த்தி சிவமங்கை (சாவகச்சேரிஇந்துக்கல்லூரி)

3 வைத்திலிங்கம் சுகேந்திராதேவி (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்)

கோப்பாய்ப் பகுதி ஆண்கள்;—

1 ச நவரத்தினம் (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி

2 இ இராஜேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

(4-ம் பக்கம் பார்க்க)

# இ. போ. ச. விளையாட்டுப் போட்டி

சாய்ந்தமருது, புதன்

பதுளை இ. போ. ச. டிப்போ பிரதேச விளையாட்டுப்போட்டி வருகிற ஜூலை மாதம் நடைபெறுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது. இப் போட்டியில் அம்பாறை இ போ ச டிப்போ உட்பட ஆறு டிப்போக்கள் கலந்து கொள்ளுகின்றன.


ரூ. 5,000 பரிசு! ராணி

"மலர் என்ன மலரோ?" போட்டி.



1ஆம் பரிசு ரூ. 1,250/-
2ஆம் பரிசு ரூ. 750/-
3ஆம் பரிசு ரூ. 500/-

தலா ரூ. 50/- கொண்ட


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பண்டைக்கால தமிழ்மக்களின் சமூகவாழ்வும் சங்க இலக்கியங்களில் அதன்பிரதிபலிப்பும் பற்றி உரை நிகழ்த்துவார். (கா. நி.)


Daily 4 Shows
YUL BRYNNER as the
**Double Man**
The Best Thriller - 1968

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
# உயிரா மானமா

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ பத்மினி
★ கே. ஆர். விஜயா ★ நாகேஷ்
நடித்த
# திருமால் பெருமை

நாளை முதல்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
ஆகிய திரைகளில் திரையிடப்பட இருக்கின்றது.
ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி
சிவாஜி, கே. ஆர். விஜயா
முத்துராமன், கீதாஞ்சலி, பாண்டியன்
நடித்த
# நெஞ்சிருக்கும் வரை

மகத்தான
4-வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு)
இன்று மட்டும் வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
நடித்த
# பொம்மலாட்டம்

இன்றுமட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
★ ரவிச்சந்திரன் ★ காஞ்சனு
நடித்த
# அதே கண்கள்
(ஈஸ்ட்மன் வர்ணச்சித்திரம்)


6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-30 செய்திச்சுருக்கம், 4-33 ஆங்கிலப்பயிற்சி, 5-00 செய்திச்சுருக்கம், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலின், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 நிலைய ஒலிப்பதிவுகள், 7-35 முத்திநெறி, 8 00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வயலின் இசை, 9-30 பேச்சு, 9-40 கர்னாடகஇசை, 10-30 செய்திச்சுருக்கம்.

வும்.

மீனம்- தெய்வபக்தி மேலிடும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பும் கிடைக்கும். சுமுகமான நாள்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வளர்மதி வெற்றி

யாழ்ப்பாணம், வியர். வடமாகாண மென்பந்துச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'மென்பந்துச்' சுற்றுப் போட்டியில் கிறீன்பீல்ட் கழகத்தை ஈச்சமோட்டை வளர்மதி மன்றம் இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு இருவாளர்கள்: இம்மனுவெலும், குமாரும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். (தே. நி)





# கப்ஸ்டன்
## சிகரெட்டுகளை வாங்குங்கள்
அவை நல்ல புகையிலைக் கலவை கொண்டவை

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

GRANT-35-63-69

1ஆம் பரிசு ரூ. 1,250/-
2ஆம் பரிசு ரூ. 750/-
3ஆம் பரிசு ரூ. 500/-

தலா ரூ. 50/- கொண்ட
50 ஆறுதற் பரிசுகள்.

இந்தப் போட்டி, ராணி சந்தன சோப் உபயோகித்து மேனி அழகைப் பெறுவது போல, அவ்வளவு சுலபமானது.







போட்டி விதிகள்:

1. மேலே காணப்படும் படங்களிலுள்ள சிகிரியா அழகிகள் சண்பகம், நீராம்பல், நீலோற்பலம் ஆகிய மலர்களை ஏந்தி நிற்கிருர்கள். எந்த அழகி எந்த மலரை வைத்திருக்கிருர் என்பதைப் பிரவேசப் பத்திரத்திலுள்ள சதுரங்களில் அந்தந்தப் படத்தின் இலக்கத்துடன் சரியாகக் குறிப்பிடுங்கள்.
2. பிரவேசப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு தபாலில் அனுப்பவும்: ராணி "மலர் என்ன மலரோ போட்டி?" த.பெ. 1031, கொழும்பு.
3. ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் 2 ராணி சந்தன சோப் கடதாசிப் பெட்டியையும் ரொக்கக் கொள்வனவு அல்லது கடன் கொள்வனவுக்கான சிட்டையையும் இணைத்தனுப்புதல் வேண்டும். ஏப்ரல் 25 ஆந் தேதிக்கு முற்பட்ட சிட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
4. ஒவ்வொரு பிரவேசப் பத்திரமும் இவ்விளம்பரத்திற் காணப்படும் படிவத்தில் அல்லது உங்கள் விற்பனையாளரிடம் பெற்ற படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும்.
5. பிரவேசப் பத்திரம் கையால் எழுதி நிரப்பப்படல் வேண்டும்; டைப் அடிக்கப் பெற்ற பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.
6. நடுவர் குழுவொன்று சரியான விடைகள் எல்லாவற்றையும் கவனமாகப் பரிசீலனை செய்து, துப்பரவு, எழுத்துத் தெளிவு, ஆகியவற்றின் அடிப்படையில், பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்கும்.
7. சரியான விடை எதுவும் வந்து சேராவிட்டால், நடுவர் குழு, கிட்டத்தட்டச் சரியாகவுள்ள விடைகளை மேற்சொன்ன அடிப்படையில் பரிசீலனை செய்யும்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதும் கட்டுப்படுத்துவதுமாகும். இத்தீர்ப்புச் சம்பந்தமாக எந்தவித கடிதங்களும் வரவேற்கப்படமாட்டா.
9. நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றும் இந்த விதிகளுக்கு அமைந்திருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
10. சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட் மலர் அன்ட் ஃபிப்ஸ் லிமிட்டெட், இன்டர்நெஷனல் அட்வேர்டைசிங் சேர்விசஸ் லிமிட்டெட் ஆகியவற்றின் ஊழியர்களையும் அவர்களின் நெருங்கிய குடும்பத்தவர்களையும் தவிர இலங்கையில் வசிக்கும் அனைவரும் இப் போட்டியிற் பங்கு பற்றலாம்.
11. சரியான விடையும் பரிசு பெறுவோர் பெயர்களும் முடிவு தேதிக்குப் பின்னர் இரண்டு வாரத்துள் வெளியிடப்படும். பரிசுக்குரியவர்களுக்கு இரண்டு வாரத்துள் பதிவுத் தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.
12. போட்டியிற் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் மேற்சொன்ன விதிகளை நன்கு அறிந்தவராகவும் அவற்றுக்குக் கட்டுப்பட இணங்குபவராகவும் கருதப்படுவர். 1522




பிரவேசப் பத்திரம்

பெயர் ..........

விலாசம் ..........

ராணி சந்தன சோப் கடதாசிப் பெட்டி இரண்டும் ரொக்க/கடன் கொள்வனவுச் சிட்டையும் இணைக்கப்பட்டுள்ளன.

முடிவு தேதி: 1969 ஜுலை 31

சுவதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்டின் ஒரு தயாரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் உலக ஒற்றுமைக்கு மாஸ்கோ மாநாடு அறைகூவல்

## இராணுவ கூட்டுகளை ஒழிக்கவும் வற்புறுத்தல்

மாஸ்கோ, ஜூன் 18

மற்ற நாடுகளின் சமூக அமைப்பு எதுவாய் இருந்தபோதிலும் அவைகளுடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று மாஸ்கோவில் நேற்று முடிவடைந்த உலக கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான தஸ்தாவேஜில் வற்புறுத்தப்பட்டிருக்கின்றது.

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையில் உறுதியான ஒற்றுமை ஏற்பட வேண்டும். குறிப்பாக ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் இந்த ஒற்றுமை வலுவாக இருக்கவேண்டும் என்று பிரதான தஸ்தாவேஜில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையில் பொருளாதார மற்றும் துறைகளில் ஒத்துழைப்பு இருக்கவேண்டியதையும் ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்ற நாடுகள் தலையிடக்கூடாதென்பதையும் வற்புறுத்தியிருப்பதுடன் கம்யூனிஸக் கொள்கைகளைப் பொறுத்த வரையில் சர்வதேச ரீதியில் கவனிக்கவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவக் கூட்டுகள் ஒழியவேண்டுமென்றும் அணு ஆயுதக் குறைப்புக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் தஸ்தாவேஜில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

மாஸ்கோவில் நடைபெற்ற உலக கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் 75 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இவர்கள் அனைவரும் மகாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட பிரதான தஸ்தாவேஜில் கைச்சாத்திட்டார்கள்.

### சீன-சோவியத் பேச்சுவார்த்தை

இன்று நடைபெறவிருந்த சீன சோவியத்-எல்லைப் பிரச்னை சம்பந்தமான பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இப்பேச்சுகள் வேறு ஒரு தினத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அயன் ஸ்மித்தின் அரசியல் திட்டம்

# ஐ. நா. பாதுகாப்பு சபை உறுப்பினர் அனைவரும் கண்டனம்

வாஷிங்டன், ஜூன் 18

ரொடீஷியாவில் சட்டவிரோத ஆட்சியாளர் அயன்ஸ்மித் தயாரித்துள்ள புதிய அரசியல் திட்டத்தை ஐ. நா. பாதுகாப்பு சபையில் அங்கம்வகிக்கும் எல்லா நாடுகளுமே கண்டித்திருக்கின்றன.

இத்தகவலை பாதுகாப்பு சபையின் தலைவர் நிருபர்களிடம் அறிவித்தார். அங்கத்தவர்கள் ஸ்மித் ஆட்சியைக் கண்டிக்கும் தீர்மானம் சம்பந்தமாக ஏகோபித்த முடிவுக்கு வரமுடியாமல் போனதால் அவர்களுடன் தனிப்பட்டமுறையில் ஆலோசனைகள் நடத்திய பின்னர் அவர் இத்தகவல்களை வெளியிட்டார். அங்கத்தவர்கள் மீண்டும் கூடவிருக்கிறார்கள். ஆபிரிக்க நாடுகள் அல்லாத நான்கு நாடுகள் ரொடீஷியாமீது பிரிட்டன் படைபலத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றைத் தயாரித்து வருகின்றன.

ரொடீஷியாவில் அயன் ஸ்மித்தின் அரசியல் திட்டம் மீதான பொதுசன வாக்கெடுப்பு இம்மாதம் 20ம் திகதி நடைபெறவிருக்கின்றது. ரொடீஷியாவிலுள்ள பெரும்பான்மை கறுப்பு மக்களின் உரிமைகளைப் பறிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள இந்த அரசியல் திட்டத்துக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்காமல் போகக் கூடும் என்றுபொதுவாககருதப்படுகின்றது.

இந்தஅரசியல்திட்டத்தை பிரிட்டன் கண்டித்துவந்துள்ளதென்றும் தொடர்ந்து எதிர்க்குமென்றும் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் திருஸ்டுவர்ட் கூறியிருக்கிறார்.

# மேற்காஸிய சண்டையில் யு.எஸ். பிரயாணிமாண்டார்

கெய்ரோ, ஜூன் 18

சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தில் நேற்று மீண்டும் கடும்சண்டையொன்று மூண்

...யில் நடைபெற்ற இன்னொரு சண்டையில் அமெரிக்க உல்லாசப் பிரயாணி ஒருவர் கொல்லப்பட்டார்.

...பேசினார்கள். இந்தப் பேச்சுக்கள் பற்றி எதுவித அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

# 'புத்தகப் பூச்சிகளாகமட்டும் மாணவர் இருக்கக்கூடாது'

அளவெட்டி, புதன்

''மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக மட்டும் இருக்காது கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்வதால் அனுபவக் கல்வி பெற வாய்ப்புண்டு'' என்று கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. வ. கந்தையா மேற்படி வித்தியாலய மாணவர்கள் மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவை ஆரம்பித்து வைத்து பேசுகையில் கூறினார்.

இச்சுற்றுலாவுக்கு சென்ற கோஷ்டியில் 75 மாணவர்களும், 5 ஆசிரியர்களும் அடங்கியிருந்தனர். இவர்கள் இலங்கையில் பல இடங்களையும் பார்வையிடச் சென்றனர்.

திரு. வ. கந்தையா மேலும் கூறியதாவது:-

''மாணவர்கள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், தொழிற்சாலைகளையும் நேரில் பார்த்து அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளுதலே உண்மையான பயன் தரவல்லது. இதுவே அனுபவக்கல்வி. பலமணி நேரம் மற்றவர்கள் சொல்லக் கேட்டும் புத்தகங்களில் படித்தும் பெற முடியாத அறிவையும், அனுபவத்தையும் சில நிமிடநேரம் நேரில் பார்ப்பதனால் பெற முடியும். இவ்விதம் பெறும் அறிவும் அனுபவமுமே என்றும் நிலைத்து நின்று பயன் தரவல்லது. இந்தச் சுற்றுலாவில் செல்லும் மாணவர்கள் இதைவேடிக்கையான செயல் எனக் கொள்ளாது கல்விக்குகந்த வகையில் இதைப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்றார்.

# 'பஞ்சம் ஏற்படாமல்தவிர்க்க குடும்பகட்டுப்பாடு அவசியம்'

இமையாணன், புதன்

''தாயின் சுகத்திற்கும், பொருளாதாரத்தைப் பணுவதற்கும் குடும்பக் கட்டுப்பாடு அவசியம். இலங்கையில்வருடத்திற்கு மூன்று லட்சம் வீதம் ஜனப்பெருக்கம் கூடிக்கொண்டே வருகின்றது. இப்பெருக்கத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கவேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் பஞ்சமும் பிணியும் ஏற்படுவது நிச்சயம்.''

இவ்வாறுஉடுப்பிட்டிஅமெரிக்கன் மிஷன் கல்லூரியில் குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின்போது தொண்டமானாறுசுகாதாரப் பரிசோதகர் திரு. த. மகேந்திரன் கூறினார். மேற்படி கல்லூரியின் உபஅதிபரான திரு. றுபர்ட் நவரத்தினம் தலைமையில் ஆசிரியர்களுக்கென இக்கலந்துரையாடல் திரு. மகேந்திரனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

# 'நாவலருக்குப்பின் ஈழத்தின் பெருமையை உயர்த்தியவர்'

உடுப்பிட்டி, புதன்

''ஓர் இலட்சியமின்றி வாழ்வு பூர்த்திபெறாது. கொள்கையில்லாத வாழ்வு பிரயோசனமற்றது. எமது முன்னேற்றம் தடைப்பட்டு

...வரையும் கவர்ந்தது என்றும் குறிப்பிட்டார்.

திரு. சு. கணபதிப்பிள்ளை (சுகனே) பேசுகையில், ''ஈழத்தில் தமிழ் இலக்கியம் தேய்ந்து வருகையில் புதிய

## திருமலைச் செய்திகள்

### பாராட்டு

கிண்ணியாததுறைப் படகில் கடந்த ஒருவருட காலமாக இயந்திர இயக்குனராகக் கடமையாற்றிய திரு. ஆறுமுகம் என்பவர் அண்மையில் இடமாற்றஞ் செய்யப்பட்டு மட்டக்களப்பு வலையிறவு என்னுமிடத்திலுள்ள துறையில் இயந்திர இயக்குனராகச் சென்றுள்ளார்

0 0

### நீரில் மூழ்கினார்

எட்டுப் பிள்ளைகளின் தந்தை குளிக்கச் சென்றவிடத்தில் நீரில்மூழ்கி மரணமானார். இச்சம்பவம் உப்புவெளியிலிருக்கும் பண்ணைக் குளத்தில் இடம் பெற்றது. தனது இருகுழந்தைகளையும் நீராட்டிவிட்டு தான் இறங்கிகுளிக்கும்போது திடீரென நீரில் அமிழ்ந்து மரணமானார் இவர் ஒரு கடற்படை வீரர். நீரில் மூழ்கி மறுநாளே கடும் முயற்சியின் பின்னர் கடற்படையினரால் காலஞ்சென்றவரின் உடல் மீட்கப்பட்டது.

0 0

### வேலைநிறுத்தம் முடிவுற்றது

திருகோணமலை கடற்படை ஸ்தாபன படைசாரா ஊழியர் சங்கத்தினரால் கடந்த பன்னிரெண்டு தினங்களாக நடைபெற்று வந்த வேலைநிறுத்தம் ரியல் அட்மிரல் கடற்படைத் தளபதி ராஜன் கதிர்காமரின் முயற்சியினால் கைவிடப்பட்டது.

0 0 0

### 'ஐக்கியத்தை நிலைநிறுத்த'

''கடந்த பத்துப்பதினைந்து வருடங்களுக்கு மேலாகவே எமது நாட்டின் தேசிய ஐக்கியம் சிதைக்கப்பட்டு நாடு எத்துறையிலும் முன்னேற முடியாதிருந்தது. இன்று தேசிய அரசாங்கம் ஐக்கியத்தை நிலை நிறுத்துவதற்காகப் பாடுபடுகிறது''

இவ்வாறு இங்கு விஜயம் செய்துள்ள உள்ளூராட்சி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா தமக்கு திருமலை நக

# பாம்பு கடித்து மரணம்

யாழ்ப்பாணம், வியா

படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த 19 வயது வாலிபர் ஒருவர் பாம்பு கடித்ததால் மரணமானார். இந்தச் சம்பவம் சரசாலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

அடுந்தவராஜா என்ற இந்த வாலிபரின் மரணம் பற்றி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

உறவினருடன் படம் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த இவர் திடீரென பாம்பு கடித்துவிட்டதாகக் கத்தியதாகவும், இரத்தம் வழிந்தோட இவர் மாவிட்டபுரத்திலுள்ள வைத்தியர் ஒருவரிடம் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றபோது அவர் மரணமாகிவிட்டதாக மரணவிசாரணையில் சாட்சியமளித்த பிள்ளைநாயகம் என்பவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் சல்வி ஆர். நவரத்தினராஜா, மரணமானவரின் தாயாரான சின்னம்மா ஆகியோரும் சாட்சியமளித்த பின் பாம்பு கடித்ததால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பளித்தார். (கா. நி)

## 3 மாதமாகியும் டெலிபோன் இல்லை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கத்தின் வீட்டிற்கு டெலிபோன் வசதியளிக்கவேண்டும் என்ற தீர்மானம் மாநகரசபையில் நிறைவேற்றப்பட்டு 3 மாதத்திற்கு மேலாகியும் இன்னும் டெலிபோன் வழங்கப்படவில்லை.

உதவிமேயரின் வீட்டிற்கு மேயர் என்ற ரீதியில் தனக்கு வழங்கப்பட்ட டெலிபோனை இணைக்கும்படி மேயர் திரு. எஸ். நாகராசா தபால் தந்திப் பகுதிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

தனது வீடு இருக்கும் அதே தெருவில் உள்ள சிலருக்கு டெலிபோன் வசதியளிக்க முயற்சிகள் நடைபெற்றுவருவதாகவும் தனக்கு இன்னும் டெலிபோன் வழங்கப்படவில்லையென்றும், இதுபற்றி மந்திரியுடன் தொடர்புகொள்ள விருப்பதாகவும் உதவி மேயர் நேற்று தெரிவித்தார்.

ராண்மைக் கழகத்தால் அளிக்கப்பட்ட வரவேற்பின் போது கூறினார்.

## 'அளவான குழந்தைகள் வேண்டும்'

சுழிபுரம், புதன்

'இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடும்பத்தினரும் அளவான குழந்தைகளைப் பெற்று சுகமாக வாழவேண்டும். இவ்வாண்டு நடைபெறும் சுகாதார விழாவின் பிரதான விடயம் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரசாரமேயாகும்' என தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற சுகாதாரப் பிரசாரக்கூட்டத்தில் பேசிய மானிப்பாய் பகுதி வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ரகுநாதன் குறிப்பிட்டார். தொல்புரம் வைத்தியசாலை வைத்திய அதிகாரி என். ரி. மூர்த்தி கூட்டத்துக்குத் தலைமைவகித்தார். மற்றும் பலர் பேசினர்.

## சியவச மலிவு விற்பனை

ருவான்வெல, புதன்

ருவான்வெல பகுதியில் சியவச டிக்கட் மலிவாக விற்பனை செய்யப்படுகிறது. இந்த டிக்கட்டுகளை வாங்கிய ஆசிரியர்களும் இப்பொழுது இவைகளை 35 சதமாக விற்கின்றனர். ஆசிரியர்கள் இப்படி விற்பதால் தாங்கள் இந்த டிக்கட்டுகளுக்காகச் செலவளித்த பணத்தின் ஒரு பகுதியையாவது பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயே இவ்வாறு செய்வதாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யு.எஸ். பிரயாணி மாண்டார்

கெய்ரோ, ஜூன் 18

சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தில் நேற்று மீண்டும் கடும்சண்டையொன்று மூண்டது. அல்சாட் பகுதியில் ஆரம்பமான இச்சண்டை அல்அன்டாரா பகுதிக்குப் பரவி சுமார் மூன்று மணி நேரம் நீடித்தது. ஐக்கிய அரபுக்குடியரசுப் படைகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்குமிடையில் நடைபெற்ற இச்சண்டை பற்றிய விபரங்கள்தெரியவில்லை என்றாலும் இருதரப்பிலும் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

ஜோர்டானிய படைகளுக்கும் இஸ்ரேலிய படைகளுக்குமிடையில் டெட்சி பகுதியில் நடைபெற்ற இன்னொரு சண்டையில் அமெரிக்க உல்லாசப் பிரயாணி ஒருவர் கொல்லப்பட்டார்.

மேற்காஸிய நெருக்கடிக்கு தீர்வுகாண்பது சம்பந்தமாக ஐ. நா. கட்டிடத்தில் நான்கு வல்லரசுப் பிரதிநிதிகளும் நேற்று 13-வது தடவையாகச் சந்தித்துப் பேசினார்கள். இந்தப் பேச்சுக்கள் பற்றி எதுவித அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேலிய பிரதமர் திருமதி கோல்டா மெயர் லண்டனில் பிரிட்டிஷ் தலைவர்களுடன் தற்பொழுது பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் ஈடுபட்டிருக்கின்றார்.

## நவீன வீமன்

உதகை, ஜூன். 18

ஹரியானாவிலிருந்து சுதாகர்பீமன் என்ற நவீன ஹெர்க்குலீஸ் ஒருவர் வந்து நீலகிரியில் உள்ளமக்களுக்கு தனது அசுரபலத்தைக் காட்டி அதிசயிக்க வைத்தார்.

8 தொன் எடையுள்ள ஒரு ரோடு என்ஜின் அவர்மார்பில் ஏறியது. அப்போதும் அவர் மந்தகாசமாகச் சிரித்துக் கொண்டிருந்தார். இரண்டு கார்கள் எதிரெதிராக வந்தன. அவ்விரண்டையும் தமது இருகைகளினாலேயே பிடித்து நிறுத்தி விட்டார். அரை அங்குலக் கனமுள்ள சங்கிலியை நொடிப் பொழுதில் சுக்கு நூறாக உடைத்தெறிந்துவிட்டார்.

உதகை விளையாட்டுக் கவுன்சில் ஏற்பாடு செய்திருந்த இந்தக் காட்சியை சர்தாரிணி உஜ்ஜல் சிங்கும் கண்டுவியந்தார்.

தன்னைப்போல் மற்றும் பல இளைஞர்களுக்கு தேகபலப்பயிற்சி அளிக்கவும், வெளிநாடுகளுக்குச் செல்லவும் சுதாகர் பீமன் திட்டமிட்டிருக்கிறார்.

## இந்திரா ஜப்பான் பயணம்

புதுடில்லி, ஜூன் 18

இம்மாதம் 23-ம் திகதி பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி ஜப்பானுக்குப் புறப்பட்டுப் போகிறார். ஜப்பானியப் பிரதமர் திரு. சாட்டோவுடன் அவர் ஆலோசனைகள் நடத்துவார்.

ஜப்பானிலுள்ளவாசெடா பல்கலைக்கழகம் திருமதி காந்திக்கு கௌரவப் பட்டம் வழங்கும்.

## அமெரிக்கா, இங்கிலாந்து செல்கின்றனர்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சாரணப்படை உதவி ஆணையாளர்களான திருவாளர்கள் எஸ். முத்துக்குமரன், ஆர். இ. இராஜநாயகம் ஆகியோரும் சென். ஜோன்ஸ் அம்புலன்சைச் சேர்ந்த முகாந்திரம் இ. பி. இராசையாவும் இம்மாத இறுதியில் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொள்கின்றனர். தங்கள் நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு அமெரிக்காவிலுள்ள நல்நோக்குச் சங்கமும், இங்கிலாந்திலுள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனமும் இவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தன. இந்நிறுவனங்களின் அழைப்பை ஏற்றுச்செல்லும் இவர்கள் அமெரிக்காவில் இரண்டு மாதகாலமும், இங்கிலாந்தில் சிலவாரமும் தங்கி, சங்கங்களின் ஆதரவில் அந்நாடுகளில் இயங்கும் நிறுவனங்களின் நடைமுறைகளைத் தெரிந்து திரும்புவார்களெனத் தெரிகிறது.

## கலை, விஞ்ஞான பொருட்காட்சி

இமையாணன், புதன்

கலை, விஞ்ஞானம் சம்பந்தமான பொருட்காட்சியொன்று நாளை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

சீனபுரட்சித்தினத்தில்

## அணுக்குண்டு வெடிக்கும்

ஹங்கங், ஜூன் 18

அணு குண்டு ஒன்றை வெடிக்கச் செய்வதின் மூலம் சீனா தனது இருபதாவது அக்டோபர் புரட்சி விழாவைகொண்டாட விருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

## இப்பகுதியில் நோயாளர்நிலை

புலோலி, புதன்

குடத்தனை, அம்பன், நாகர்கோவில் ஆகிய கிராம மக்களுக்கும் அந்த கிராமத்தைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதி மக்களுக்கும் அம்பன் அரசினர் வைத்திய சாலை ஒன்றுதான் இருக்கிறது.

இவ்வைத்திய சாலையில் நோயாளிகளுக்கு தேவையான வசதிகள் கிடைப்பது அரிதாக உள்ளது. வைத்திய சாலையில் 'அம்புலன்ஸ்' கிடையாது ஆபத்தான நிலையில் நோயாளிகள் அவதிப்பட்டால் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அல்லது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அறிவித்துத்தான் அம்புலன்ஸ் வரவழைக்க வேண்டும். இதனால் நோயாளிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

ஜனப்பெருக்கம் அதிகமாக உள்ள இப்பகுதிக்கு நிரந்தர பல் வைத்திய டாக்டர் இல்லாதலால் பலமைல் தூரத்திலுள்ள மந்திகைஅரசினர் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டி உள்ளது.

வாரத்துக்கு ஒருமுறையாவது ஒரு பல் வைத்திய டாக்டரை சுகாதாரஇலாகா அம்பன் ஆஸ்பத்திரிக்கு நியமிக்காததையிட்டு இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.

## அடுத்தமாதம் நடைபெறும்

கொழும்பு, புதன்

இம்மாதம் 25-ம் திகதி முதல் 5 தினங்கள் இலங்கை தியாகராஜகான சமாஜத்தினால் கொண்டாடப்பட விருந்த தமிழிசைவிழா ஸ்ரீதியாகராஜ உற்சவம் நாவலர் சிலை திறப்பு விழாவினை யொட்டி அடுத்தமாத முற்பகுதிக்குப் பின்போடப் பட்டுள்ளதாக சமாஜம் அறிவித்துள்ளது.

## 'நாவலருக்குப்பின் ஈழத்தின் பெருமையை உயர்த்தியவர்'

உடுப்பிட்டி, புதன்

''ஓர் இலட்சியமின்றி வாழ்வு பூர்த்திபெறாது. கொள்கையில்லாத வாழ்வு பிரயோசனமற்றது. எமது முன்னேற்றம் தடைப்பட்டு வருவதற்குக் காரணம் எம்மிடையே தமிழ்ப்பற்றும், ஊக்கமும் இல்லாமையேயாகும். வள்ளுவர் யாத்த குறளுக்கு விழாவெடுத்துக் கொண்டாடுவோர் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களைச் செயல்படுத்தத் தயக்கம் காட்டுவது விந்தையாயுள்ளது.''

மேற்கண்டவாறு புலோலி தெற்கு, புற்றளை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற முதுபெரும் தமிழறிஞர் காலஞ்சென்ற திரு. கந்தமுருகேசனார் நான்காவது ஆண்டு நினைவு விழாவில் பேசுகையில் திரு. சி. செல்லையா கூறினார்.

கந்தமுருகேசனார் நினைவு விழாவிற்குத் தலைமை வகித்த வித்துவான் திரு. சி. சுப்பிரமணியம் பேசுகையில், ''கந்தமுருகேசனார் தமிழின் பாரம்பரிய புகழைக் காப்பாற்றுவதற்கு உயிரையும்மதியாது உழைத்தார். எழுந்து நடமாட முடியாத நிலையிலும் தமிழ்தான் தனது உயிர் என வாழ்ந்தார். புலோலியில் அறிஞர்களும், கல்விமான்களும் பலர் தோன்றக் காரணமாக விருந்த கந்தமுருகேசனார் ஈழத்தின் பெருமையை நாவலருக்குப் பின் உயர்த்தியவர்களில் ஒருவராக விளங்குகின்றார்'' என்று கூறினார்.

வித்துவான் திரு. க. ந. வேலன் பேசும்போது ஆசிரியத் தொழிலில் கந்தமுருகேசனார் புதுமையைக் கையாண்டார்என்றும், அவரது சிறந்த பண்பே அனைவரையும் கவர்ந்தது என்றும் குறிப்பிட்டார்.

திரு. சு. கணபதிப்பிள்ளை (சுகனா) பேசுகையில், ''ஈழத்தில் தமிழ் இலக்கியம் தேய்ந்து வருகையில் புதிய இலக்கியங்கள் பலதோன்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் பல இலக்கிய நூல்களைஎழுதி வெளியிட்டார். தமிழின் மீது அவர்கொண்ட பற்று அளவிடமுடியாதது. அவரின் தமிழ் இன்றும்வாழ்ந்து கொண்டு அறிஞரை நினைவூட்டுகின்றது'' என்று சொன்னார்.

பண்டிதர் திரு. வீ. பரந்தாமன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் திருவாளர்கள் மன்னவன் கந்தப்பு, வே. ஆறுமுகம், திருமதி த. மாலோகமணி ஆகியோர் கலந்துகொண்டனர். திரு. வ செல்வராசா நன்றியுரை கூறினார்.

## ஜூலை 5-ந் திகதி கூட்டுறவு விழா

மானிப்பாய், புதன்

யாழ்ப்பாண நகர எல்லைக்குள் இருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் அனைத்தும் ஒன்றாகச்சேர்ந்து சர்வதேச கூட்டுறவுத்தின விழாவை ஜூலை 5-ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கொண்டாடுவதென மேற்படி சமாசப் பிரதிநிதிகள் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இவ்விழாவிற்காகத் தெரிவுசெய்யப்பட்ட நிருவாக சபைக்கு தலைவராக திரு. ஏ. ஜே. இராஜதுரைசிங்கமும், காரியதரிசியாக திரு. போல் ராஜாவும், தனாதிகாரியாக திரு. சோமஸ்கந்தாவும் தெரிவு செய்யப்பட்டனர். இவ்விழாவையொட்டி கூட்டுறவாளரின் ஊர்வலங்கள், உரைநிகழ்ச்சிகள், கலைநிகழ்ச்சிகள் அனைத்தும் பிரமாண்டமான முறையில் நடாத்துவதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வ.ஐ.மே. சபை உபதலைவர் ஆர். சி. எஸ். குக் தலைமை வகித்தார்.

## குள்ளர்கள் சங்கம்

உஹாம்பர்க், ஜூன் 18

ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள ஹாம்பர்க் நகரில் குள்ளர்கள் சங்கம் ஒன்று உருவாகியிருக்கிறது. இந்தச் சங்கத்தைத் துவக்கியவர்கள் ஈவா என்ற பெண்ணும் ஆக்டோ எங்க்லர் என்ற ஆணுமாவார்கள். கணவன் மனைவியரான இவர்கள் இருவருமே குள்ளமானவர்கள்தான். சங்கத்தை ஆரம்பித்ததும் மளமளவென்று ஐம்பது குள்ளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகி விட்டார்கள். குள்ளர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ள அனைவருமே ஐந்தடிக்கும் குறைவான உயரமுள்ளவர்கள்தான்.

## இடமாற்றம்

இமையாணன், புதன்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கு. சந்திரசேகரம் கெருடாவில் சைவ வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவருடைய இடத்துக்கு கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் முருகேசு மாற்றப்பட்டுள்ளார்.





கூரை இடுவதற்கும் வேலி போடுவதற்கும், சுற்றிச் சுவர் அமைப்பதற்கும் குறைந்த விலை, நீடிய பாவனை

# றிவர் பிராண்ட்

நாகம் பூசிய தகரங்கள் இப்போது இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன

நாகம் பூசிய இரும்புத் தகரங்கள் சமையல் கிடங்குகள் ஆகியவற்றிற்கு மிகவும் ஏற்றவை. தொழிற்சாலை தோட்டக் கட்டிடங்களுக்கு மிகவும் ஏற்றவை

24, 26, 28 மானியுள்ளவை பெறும் தேவைகளுக்குப் பயன்படுகின்றன. அத்துடன் இவை தேயிலை றப்பர் தொழிற்சாலைகள் களஞ்சியங்கள் பண்டகசாலைகள் தானியக்களஞ்சியங்கள்

28 30 32 35 மானியுள்ளவை தோழில் வளப்பவர்கள் குடிசைத் தொழிலாளர்கள் கமக்காரர்கள் ஆகியோருக்கும் தற்காலிக கட்டிடங்களுக்கும் ஏற்றவை

கூடிய நன்மைகள் ஐந்து: சிக்கனமானது; நீண்டகாலம் பாவிக்கக் கூடியது; இலகுவாக நிறுவக் கூடியது; தீ பிடித்தலையும் கால நிலைச் சேதத்தையும் தடுக்க வல்லது; குறைந்த செலவில் தாபரிக்கக் கூடியது.

இப்பொழுது இலங்கை முழுவதிலுமுள்ள பிரபல இரும்புக்கடைகளில் உடனே கிடைக்கும்

# றிவர் பிராண்ட்

தயாரிப்பாளர்

## இலங்கை கல்வனைசிங் இன்டஸ்றீஸ் லிமிட்.

தொழிற்சாலை: சேழ கந்தரின தோட்ட வீதி இரத்மலானை, தொலைபேசி (71) 7987

கொழும்பு அலுவலகம்: 450, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12, தொலைபேசி 33143

GIS-69 MASTERS

### மணிவாக்கு

செயல் வடிவத்தில் அஹிம்சை மிகுந்த வேகத்துடன் செல்கிறது. அப்போது அது ஓர் அற்புதமாகிவிடுகிறது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆனி மாதம் 5-ந் திகதி (19-6-69)


## அ. செ. உ. சா. வரி அதிகரிப்பு

'பீக்ஸ்' எனப்படும் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் (அ. செ. உ. சா.) வரி விகிதத்தை நூற்றுக்கு 44 லிருந்து 55 க்கு அரசாங்கம் உயர்த்தவேண்டி எற்பட்டது வருந்தத்தக்கதாகும்.

இலங்கை உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கான மூலப்பொருள்களை இறக்குமதி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனேயே அ. செ. உ. சா. வரி முறையை அரசாங்கம் விதித்தது. சில வாரகாலம் வெவ்வேறு விகிதங்களை விதித்துப் பார்த்து முடிவில் ரூ. 100 க்கு 44 விகிதம் வரிவிதிப்பதென்று தீர்மானித்தனர். இந்த வரி விதிப்பின் பயனாக, அரசாங்க வருமானமும் அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது நடப்பு வருடத்திலே 'பீக்ஸ்' வரி மூலம்35 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்த்ததில் இதுவரைமுதல்6மாதங்களில் 12 கோடிதான் கிடைத்துள்ளதென்றும் வருட முடிவில் எதிர்பார்த்ததை விட9கோடிகுறையுமென்றும் மத்திய வங்கி கருதுகின்றது. வரி விகிதத்தை 55 க்கு உயர்த்தியதால் வருமானம் கூடுமா என்பது மிகவும் சந்தேகம்

இந்த 'பீக்ஸ்' வரிவிகிதத்தை உயர்த்தவேண்டியதற்கு முக்கிய காரணம் இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களின் மதிப்புக் குறைந்து, நமது வெளிநாட்டுச் செலாவணி நிதி அநேகமாக காலியாகிவிட்டதுதான். அந்நியச் செலாவணி சான்றிதழ்களைப் பெற்று மூலப்பொருள்களை இறக்குமதி செய்கிறவர்கள் இனி வரிவிகிதத்தை அதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்படுவதால், தங்கள் கைத்தொழில் பொருள்களின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்குமாதலால் பொதுமக்கள் இதை விரும்ப...

ரூ. 96 தான் இருந்து வந்தது இலங்கை ரூபாயின் மதிப்பைக் குறைத்து, பீக்ஸ் வரியையும் அதிகரித்தபின் இனி ரூ 222 கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். யாழ்ப்பாணத்திலிருந்து, நமது இலங்கை விமானத்திலும் திருச்சிக்குச் செல்ல மட்டும் ரூ 117 ஆகுமாம் கட்டணத்தை நியாயமற்ற அளவுக்கு உயர்த்தியதால், விமானமூலம் யாத்திரை செல்லுபவர்களின் எண்ணிக்கை குறைந்து, இலங்கை விமான சர்வீஸின் வருமானமும் மேலும் குறைவதாக இருக்கும். இந்த நிலைமையைப்பற்றி அரசாங்கம் மீண்டும் பரிசீலனை செய்து கட்டண விகிதங்களை குறைத்தால்தான் பிரயாணிகளுக்கும் இந்த சர்வீஸுக்கும் நன்மையாகும்.

இலங்கையின் தேயிலை, ரப்பர் முதலிய ஏற்றுமதிச் சரக்குகளுக்கு நியாயமான விலையைக் கொடுக்க வெளி வல்லரசுகள் மறுப்பதாலேயே இலங்கைக்கு இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது. ஐ. எம். எப். எனும் சர்வதேச நாணய நிதி ஸ்தாபனத்தார் மேற்குறித்தவரியை 60 சத விகிதத்துக்குஉயர்த்த வேண்டுமென்று கூறிய யோசனையை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தாலும் கூட நமது நிதி நிலைமையை சிறிதும் மேம்படுத்தமுடியாது நமது ஏற்றுமதிப் பொருள்களுக்கு வெளி வல்லரசுகள் நியாயமான விலை கொடுக்க சம்மதிப்பது ஒன்றுதான் இன்றைய அவல நிலைக்கு மருந்தாகும். இதற்குக்கூட அவை சம்மதிக்காதவரை நாம்நமதுதேவைகளைப் பொறுத்தவரை தன்னிறைவு கொள்கையை இனியும் தீவிரமாகக் கடைப்பிடிக்கவும் உணவு, உடை உற்பத்தியைப் பெருக்கி சுதேசி இயக்கத்தை வளர்த்து போகப்பொருள்களை தியாகம் செய்யவும் ...

நாவலர் சிலைதிறப்பு விழாவும் மகாநாடும்

# கொடிகள் விற்பதில் மாணவர் பேரார்வம்; நிதி சேர்ப்பதில் நாவலர் சபை தீவிரம்

(நமது காரியாலய நிருபர்)

யாழ்ப்பாணம், வியா. "நாவலர் மகாநாட்டுக்கு இன்னும் பத்துத் தினங்களே இருக்கின்றன. நாவலர்சிலை பவனி, திறப்புவிழா, மாநாடு, கலைவிழா ஆகியனவற்றின் ஒழுங்குகள் சகலதும் முடிவடையும் கட்டத்தில் இருக்கின்றது. விழா அழைப்பிதழ்களும், நிகழ்ச்சி நிரலும் இவ்வார முடிவுக்குள் சகலருக்கும் அனுப்பிவைக்கப்படும். சகல இடங்களிலிருந்தும் எதிர் பார்ப்பதற்கும் அதிகமான ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைப்பதில் இருந்து மகாநாடு மகத்தானதாக அமையுமென்பது நிச்சயமாகிவிட்டது."

நாவலர் மாநாட்டுச் செயலாளரான திரு. என். சோமகாந்தன் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

### பவனிக்குப் பதிலாக சிறு சிலைகள்

நாவலர் சிலை வார்ப்பு வேலைகள் இறுதிக் கட்டத்துக்கு வந்துவிட்டன. பூரணத்துவம் பெற்றதும் இன்னும் சில நாட்களில் அதை நாவலர்சபை பொறுப்பேற்கும் நூற்றுக்கணக்கான பல சிலைகளை வார்ப்பதில் சிற்பக் கலைஞர்கள் இப்போது இரவு பகலாக கவனம் செலுத்திவருகின்றனர். சிலையின் பவனி கண்டி, மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களுக்கு மேற்கொள்ளப்படாததால் சிலைவரவேற்பு விழாக்களுக்குப் பதிலாக ஆங்காங்கே நாவலர் விழாக்களை நடத்துவதற்கு வசதியாக இச் சிறிய சிலைகளைப் பல நகரங்களிலுமுள்ள சபைகளுக்கும் அனுப்ப முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### நன்கொடை வேண்டும்

மாநாட்டு நிதிக்கு மேலும் பணம் வந்து சேர்ந்துள்ள போதும் நாவலர் நினைவுப் பணிகளை நிறைவேற்றப் பல மடங்கு பணம் தேவையாகவிருப்பதாக மாநாட்டுப் பொருளாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளதாவது:

மாநாட்டு நிதிக்கெனப் பலர் மனம்கோணாது விளம்பரங்கள் மூலமும் நன்கொடைகளாகவும் நிதி உதவி அளித்துள்ளனர். மாநாடு நடத்துவதன்றி நாவலரின் ஞாபகமாகப் பல பணிகளையும் தொடங்க விருப்பதால் இன்னும் பல மடங்கு நிதி தேவை. அளப்பரிய பணிபுரிந்த நாவலர் பெருமான் மீது அளப்பரிய பற்றுக்கொண்ட தமிழ்மக்கள் அவர் நினைவுப் பணிகளைப் புரிவதற்கு மேலும் அள்ளிக்கொடுக்க முன்வர வேண்டும். இதற்கு நிதி அளிக்க விரும்புகிறவர்கள். விளம்பரமாக இம்மாதம் 21-ம் திகதி அனுப்பிவைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீகாந்தாவின் கொடிதினச் செய்தி

நேற்றுமுன்தினம் ஆரம்பமான கொடிதினத்தை முன்னிட்டு நாவலர்சபைப் பொதுச் செயலாளரான திரு. எம். ஸ்ரீகாந்தா பின்கண்ட செய்தியை விடுத்துள்ளார்.

"தமிழ்மக்களின் தன்னிகரற்ற தலைவராக சென்ற நூற்றுண்டில் விளங்கி, தன்னலமற்ற தொண்டுகளாலும் தியாகத்தாலும் சைவத்தையும் தமிழையும் காத்த நாவலர் பெருந்தகைக்கு நம் இனம் ஏழெழு தலைமுறைகளுக்கும் அஞ்சலி செலுத்தவேண்டும். அவர் நினைவாக நாம் எத்தனையோ பணிகளைச் செய்யவேண்டும். அவர் திருவுருவச்சிலை நிறுவப்படும் இவ்வேளையில்; நாவலர் நாமம் தமிழ்மக்களின் இதயமெல்லாம் நிறைந்துள்ள இந்நேரத்தில் நாவலர் நினைவுப் பணிகளைப் புரிவதை நோக்கமாகக்கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்குச் சகலரும் எல்லா ஒத்துழைப்பையும் அளித்து உதவ வேண்டும்".

### மாணவர் மத்தியில் பேரார்வம்

நாவலர் கொடிகளை விற்பனை செய்வதிலும், வாங்குவதிலும் வடபகுதி மாணவர்கள் பேரார்வம் காட்டி வருகின்றார்கள். கொடித்தினம் ஆரம்பமாக இரு நாட்களுக்குள்ளேயே ஆயிரக்கணக்கான நாவலர் கொடிகள் விற்பனையாகியுள்ளதாக அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார் இம் மாதம் 25-ம் திகதிவரை கல்லூரிகளிலும், அடுத்த மாதம் 2-ந் திகதிவரை பொதுமக்கள் மத்தியிலும் கொடிகள் விற்பனைசெய்யப்...

## மரங்களை அழியவிட்டால் வட கு பாலைவனமாகலாம்

— பொ. மாணிக்கவாசகர் —

(யாழ். மாவட்டவிவசாய விசாலிப்பு அதிபர்)

சென்ற சில வருடங்களாக யாழ் மாவட்டத்தில் மழை வீழ்ச்சி குன்றி வருகிறது கிணற்றிலுள்ள நீரும் சவர்த்தன்மை அடைகிறது. நன் நிலங்களும் உவராக மாறுகின்றன. வரட்சிக் காலங்களில் காற்றின் வேகத்தினாலும், மழைக் காலத்தில் வெள்ளப் பெருக்கினாலும் நில மேற்பரப்பிலுள்ள தாவர போசாத்து நிறைந்த மண்ணை நாம் இழக்கின்றோம். இத்துடன் நில்லாது கடலோரப் பகுதிகளில் ...

ஆனால் சென்ற சில வருடங்களாகச் சனப்பெருக்கத்திற்கேற்ப அதிக உணவு உற்பத்திக்காக, காடுகளை அழித்துக் களனிகளாக்கினர் மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் எழுப்புவதனால், ஊர்மனையிலுள்ள விருட்சங்கள் நடப்பட்ட மேட்டு நிலங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கை மரங்களுக்குப் பனையும், பலகைக்கு வேம்பும், ... இலுப்பையும், ... தறிக்கப்பட்டு வருகின்றன. ...

### பரந்தன் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் பரந்தன் ரசாயன தொழிற்சாலையிலுள்ள இலங்கைவர்த்தக ஊழியர் சங்க, தொழிலாளர்களை, தொழிற்சாலைகளை ஆகியவை, முழுவதும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்துள்ளதாக அவர் வேலும் தெரிவித்தார்.

தொழிலாளர் கோரிக்கை சம்பந்தமாக, சங்கப்பிரதிநிதிகள் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜி. பொன்னம்பலத்தை சந்தித்ததாகவும் அடுத்தவாரம் இக் கோரிக்கைகள் சம்பந்தமாக கைத்தொழில் மந்திரியை சந்திக்க அவர் ஏற்பாடு செய்திருப்பதாகவும் தொழிற் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாண எம். பி. யிடம் 6 மாததிற்கு முன்னரே இக்கோரிக்கைகள் பற்றி தெரிவித்ததாகவும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் அவர் மேலும் கூறினர்.

### பொது ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து காலை 4 மணி தொடக்கம் சம்பளம் கொடுக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை, குறிகாட்டுவான், நுப்பிட்டி, கொடிகாமம் ஆகிய இடங்களில் இரவு தங்குவோருக்கு தண்ணீர் வசதி திருப்தியற்றதாய் இருப்பதால அவ்விடம் செலலும் பஸ் சிப்பந்திகள் தங்கள் குடிதண்ணீரை தாங்களாகவே எடுத்துச் செலவதற்கு பிளாஸ்டிக் போத்தலகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. பாவனையின் பின் போத்தலகள் திருப்பி ஒப்படைக்கப்படவேண்டும்.

பஸ்களில பொதிகள் ஏற்றுவதற்கு இப்போது பிரதான பொறியியல அதிகாரி 400 றாத்தல மாத்திரம் ஏற்றுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார். இது பஸ்சிப்பந்திகளின் கடமையை இலகுவாக்குகிறது. 25-ந் தேதிக்குமுன் ரேஸ்ரர் போடப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது, துவிசக்கரவண்டிகள் நிற்பாட்டு ...

# ஐயாறன் எழுதுவது

இராமேச்வரத்திலிருந்து தலை மன்னருக்குக் கப்பலில் வருகையில், கீழ்த்தட்டிலே அசுத்தமாக இருப்பதாயும் துர்நாற்றம் வீசுவதாகவும் மேல்தட்டு கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்றும், அங்கிருந்த குறிப்புப் புத்தகத்தில் எழுதியிருந்தேன்.

அதைப் பார்த்துவிட்டு, இந்திய கப்பல் கூட்டுத்தாபன அதிகாரி எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

கப்பலிலுள்ள குறிப்புப் புத்தகத்திலே இம்மாதம் 9-ம் திகதி தாங்கள் கூறியுள்ள யோசனைகளுக்காக நன்றி தெரிவிக்கிறோம் 'இர்வின்' கப்பல் மானேஜரிடம் இதைத் தெரிவித்திருப்பதால், கப்பலின் அடித்தளத்தை கூடுமானவரை சுத்தமாக வைத்திருக்க அவர் தேவையானவற்றைச் செய்வார். என்றாலும், கீழ் தளத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளும் பொறுப்பு பிரயாணிகளுக்கும் உண்டு என்பதைத் தாங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

மேல் தளத்தின் கட்டணத்தைக் குறைப்பதைப் பற்றி ஏற்கெனவே ஆலோசித்து வருகிறோம். இதுபற்றி முடிவுசெய்ய சிறிதுகாலமாகலாம். மீண்டும் நன்றி.

தங்கள் உண்மையுள்ள
எல். வி. நாராயணசுவாமி,
உதவி நிர்வாகி
இந்திய கப்பல் கூட்டுத்தாபனம்

0 0 0

குறிப்புப் புத்தகத்தில் எழுதியதைப் பற்றி உடன் நடவடிக்கை எடுத்த அந்த அதிகாரியைப் பாராட்டுகிறேன். எழுதிவைத்த சில நிமிடங்களுக்குள், சில சிப்பந்தியர் வந்து, கக்கூஸ் முதலியவற்றை சுத்தம் செய்ததைப் பார்த்தேன். அதிகாரி கூறுவதுபோல், பிரயாணிகளும், கப்பலை சுத்தமாக வைத்திருப்பதில் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

கப்பலின் மேல்தள கட்டணத்தைக் குறைப்பதால், அதில் அதிக பிரயாணிகள் செல்லவும் கீழ்தளத்தில் நெருக்கம் குறையவும்கூடும். இந்த நடவடிக்கையை இந்திய கப்பல் கூட்டுத்தாபனம் இனி தாமதமின்றி எடுக்குமென்று நம்புவோம்.

0 0 0

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபையினர் ஒன்பதாவது ஆண்டு கணக்கு ... ஊர்களுக்கும் மேலான முன்மாதிரியாகும். பசிபட்டினிசான் இன்று உலகப் பிரச்னைகளுக்கெல்லாம் அடிப்படையான முக்கிய காரணம். தெய்வத்தின் பெயரால் கேட்டால், பொது மக்கள் தாராளமாக உதவி வழங்கத் தயாராக இருப்பதைப்பார்க்கிறோம். சுமார் 41 ஆயிரம் ரூபாய்வரை இந்த தர்மத்துக்கு வரவு செலவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. பசிபட்டினி பிரச்னையை, ஒவ்வொரு ஊரிலும் அன்னதானசபைகள் ஏற்பட்டு தெய்வத்தின் பெயரால் பிரசாதமாக வழங்கி தீர்க்க முற்பட்டால் ஊரில் அமைதியும் சுபீட்சமும் ஏற்படமுடியும்.

0 0 0

குண்டனாய்ச் சமணரோடே கூடி நான் கொண்டமாயத், துண்டனே சுடர் சொள்சோதி தூநெறியாகி நின்ற, அண்டனே அமரரேறே திருவையாறமர்ந்த தேனே, தொண்டனேன் தொழுதுன்பாதஞ் சொல்லி நான் திரிகின்றேனே.

— அப்பர் அடிகள்

### இசை மேதைக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், வியா.

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம் திரு சித்தூர் சுப்பிரமணியபிள்ளைக்கு அளித்த பாராட்டுவிழா கடந்த திங்கட்கிழமை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. விழுவுக்கு திரு கே. எஸ். சண்முகநாதன் தலைமை தாங்கினர்.

இன்றைய மட்டரகமான சினிமாப்பாடல்கள் தான் இசையுலகினதும் தமிழர் பண்பாட்டினதும் பெரும் விரோதியென்றும், இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றக்கூடிய தகுதி சித்தூரார் போன்றோருக்கே உண்டு என்றும் திரு. தில்லைராஜா தமது உரையில் குறிப்பிட்டார்.

அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் சேவையைப் புகழ்ந்து பாராட்டி திரு. சித்தூர் சுப்பிரமணியபிள்ளை உட்பட பலர் பேசினர். இவ்விழாவில் திரு எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர், திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணுதேசிகர், கலையரசு சொர்ணலிங்கம், இசைப்புலவர் எம். சண்முகரத்தினம், ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி வரிவிகிதத்தை அதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்படுவதால், தங்கள் கைத்தொழில் பொருள்களின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்குமாதலால் பொதுமக்கள் இதை விரும்ப மாட்டார்கள். விமான, கப்பல் கட்டணங்களும் இதனால் அதிகரிப்பதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்துக்கும்திருச்சிக்கும் ஏற்கெனவே விமான மூலம் சென்று திரும்ப விறைவு கொள்கையை இனியும் தீவிரமாகக் கடைப்பிடிக்கவும் உணவு, உடை உற்பத்தியைப் பெருக்கி சுதேசி இயக்கத்தை வளர்த்து போகப்பொருள்களை தியாகம் செய்யவும் அதிகம் தயாராக இருக்கவேண்டும். 'பீக்ஸ்' எனும் அ. செ. உ. சான்றிதழ்வரிவிகிதத்தை உயர்த்துவது, கடற்பாறை விழுங்கினவனுக்கு சுக்குக் கஷாயம் கொடுப்பதையே ஒக்கும்.

## திருமலைகோர விபத்து

திருக்கோணமலைக்கும் உப்புவெளிக்குமிடையில் ஏகாம்பரம் வீதியில் மூன்று தினங்களுக்குமுன் நிகழ்ந்த கோரவிபத்தில் சுமார் ஏழுவயதான சிறுவர்கள் இருவர் ஸ்தலத்திலேயே பரிதாபகரமாக மாண்டதும், மற்றும் மூன்று சிறுவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் கலங்காத நெஞ்சையும் கலங்கச் செய்யும்.

செல்வநாயக புரத்திலிருந்து இரண்டரைமைல் தூரத்திலுள்ள உப்புவெளியிலிருக்கும் பாடசாலையில் கல்விகற்கச் சென்று திரும்பும் வழியில்தான் லொறி விபத்தில் சிக்கி இந்த இரு சிறுர்களும் மாண்டிருக்கின்றனர். செல்வநாயக புரத்தில் ஒரு பாடசாலையை நிறுவுமாறு அப்பகுதி மக்கள் விடுத்த கோரிக்கையை கல்வி அமைச்சரும் கல்வி அமைச்சு அதிகாரிகளும் ஏன்தான் நிறைவேற்றுமலிருக்கிறுர்களென்பது புரியவில்லை. சின்னஞ் சிறுர்கள் இரண்டரைமைல் தூரம் நடந்து சென்று கல்வி கற்று வருவதென்றுல் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டு வீட்டிலிருக்கும் தாயார் நிம்மதியாக இருக்க முடியுமா? தந்தைதான் தன் தொழிலைச் செய்ய முடியுமா? இந்த விபத்துக்குப்பின் மற்றும் பெற்ருேரும் தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவார்களா? பாடசாலைகள் சூழ நிறைந்துள்ள இடங்களில் என்ன பாடுபட்டாவது ஒரு சில பாடசாலைகளைப் பொறுப்பேற்க முனைந்த கல்வி அமைச்சர், இனியாவது பாடசாலையே இல்லாத செல்வநாயகபுரத்தில், ஒரு சிறுவர்பாடசாலையை யாவது நிறுவ முன்வர வேண்டும்.

இந்தக் கோர விபத்து பற்றிப் பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். ஆயினும் வீதியில் போக்குவரத்துச் செய்யக் கூடிய தகுதியுடைய வாகனங்களுக்குத் தான் 'லைசன்ஸ்' புதுப்பிக்கப்படுகின்றனவா வென்பதை ஆராய்வதற்கு ஒரு கமிஷன் நியமித்தால் கூட பயன் இல்லாமல் போகாது.

## பெரிய புராண விரிவுரை

யாழ்ப்பாணம், வியா.

யாழ் பாணம் 'சிவதொண்டன் ஆதரவில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பெரிய புராண விரிவுரை நி ழ்த்தப் படவிருக்கிறது. நாளை தொடக்கம் ஸ்ரீவைத்தீஸ்வரப்பெருமான் முன்னிலையில் ஆரம்பமாகும் இப்பெரிய புராண விரிவுரையை திரு. கா. கி. நடராஜன் நிகழ்த்துகிருர். திரு. கே. கனகரத்தினத்தால் இந்தவிரிவுரை தொடக்கிவைக்கப்படும்.

— —

## நாவலர்.........

2-ம் பக்கத் தொடர்ச்சி

3 சு கருணாநிதி திருநெல்வேலி (செங்குந்தஇந்துக்கல்லூரி)

கோப்பாய்ப்பகுதி பெண்கள்:

1 சு நாகேஸ்வரி (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

2 ம சாந்தமலர் (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி

3 ச வரதாம்பிகை (கோப்பாய் மகாவித்தியாலயம்)

உடுவில், காங்கேசன் துறை, தீவுப்பகுதி மாணவர் போட்டிகள் இப்போது நடைபெறுகின்றன. (கா. நி)

காலத்தில் வெள்ளப் பெருக்கினுலும் நிலமேற்பரப்பிலுள்ள தாவர போசாத்து நிறைந்த மண்ணை நாம் இழக்கின்ருேம். இத்துடன் நில்லாது கடலோரப் பகுதிகளில் காற்று, சாகுபடி செய்யும் நிலப்பரப்பில் மணலை அள்ளி வீசுவதால் விவசாயிகளுக்கு அதிக தொல்லையைக் கொடுத்து வருகின்றது. இவையாவிற்கும் காரணம் நம் மாநிலத்தில் வானளாவி ஓங்கி வளரும் விருட்சங்களின் எண்ணிக்கை குன்றி வருவதேயாகும்.

நம் மூதாதையர், கற்பக தரு எனக்கருதிய பனையையும், நோய்களைத் தடுப்பதற்கும், சிறந்த பலகைகள் எடுப்பதற்கும் ஏராளமான பசுந்தாள் பெறத்தக்கதுமான வேம்பையும் சிறந்த எண்ணையையும், முழுக்குக்குகந்த அரப்பையும் இனிய பூவையும் தரும் இலுப்பையையும், அடர்ந்து ஓங்கிப் படர்ந்து அதிக பழம் தரும் புளியையும், தீங்கனி தரும் விளாத்தி, வில்வ, நெல்லி முதலியவற்றையும் மூக்கனியாம் மா, பலா, வாழையையும், விருப்பியுண்ணும் கறிமுருங்கைகளையும், தமக்கும்தம்சந்ததிக்கும் பயன்பட குடியிருப்பு நிலத்திலும், தரிசு நிலங்களிலும், கடற்கரை ஓரங்களிலும் பரந்த காடுகள் இருந்த காலத்தில் அதற்கென பொருத்தமானவற்றை நாட்டினமையால் பண்டைக்காலத்தில் பாலைவனமாக இருந்த இம் மாநிலத்தைச் சோலைவனமாக்கினர். அதன் பயனுக மழை, போகம் தப்பாதும் மாரி பொழிந்தது. கிணற்றில் நன்னீர் ஊற்றெடுத்தது. காற்றின் வேகமும், ஓடும் மழை வெள்ளத்தின் வேகமும் மேற் கூறப்பட்ட விருட்சங்களால் தடுக்கப்பட்டன. கடலோரமும், சாகுபடி செய்யும் பொன்விளை பூமியும் பாதுகாக்கப்பட்டன

பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கை மரங்களுக்குப் பனையும், பலகைக்கு வேம்பும், சூளை தயாரிப்புக்கு இலுப்பையும், புளியும், தறிக்கப்பட்டு வருகின்றன. இவ்வண்ணம் பயன்பெறுபவர்கள் தம் சந்ததிக்கு பயன்படுமாறு புதிதாக மேற்கூறிய விருட்சங்களை நடுவதற்கு விழைவதிலலை.

மலை, காடு, கங்கை இலலாத இம்மாவட்டத்தில இவ்வாருகக் காலத்திற்குக் காலம் மேற்கூறிய விருட்சங்களை நடாது அழித்து வருவோமேயானுல காலகெதியில் திரும்பவும் பாலைவனமாகலாம். ஆகவே தயவுசெய்து நம் வருங்காலச்சந்ததியினரை நெஞ்சிலிருத்தி அவர்களுக்கும் பிரயோசனப்பட, நாடு வளம்பெற, மண்ணைக்காக்க வானம் பொழிய வேண்டுமாளுல் வான் பயிர்களாகிய பனை, புளி, இலுப்பை, வேப்பம் விதைகளை நேரகாலத்துடன் சேகரித்து எதிர் வரும் பருவகாலத்தில் கடற்கரையோரங்களிலும் உப்பாறு ஓரங்களிலும் அதிககல்லுள்ள தரைகளிலும், தரிசு நிலங்களிலும் பொதுஸ்தாபனக்காணிகளிலும், வீதியோரங்களிலும், இடத்திற்குத்தகுந்த மேற்கூறிய விருட்ச விதைகளையும், நெலலி, விலவை, விளாத்தி, மரமுந்திரிகை, தேக்கு, சவுக்கு, சமண்டலை முதலிய கன்றுகளையும், சிரமதான இயக்கமூலம் நடும்படியாகக் கேட்கப்படுகின்றீர். முன் மாரியில இவ்விருட்ச விதைகளையும், கன்றுகளையும் நடின், அவை முயற்சியை எதிர்பாராது தாமாகவே வளர்ந்து நம் சந்ததிக்குதவும்.

வான்முகில வளாது
பெய்ய,
நம் நாடு வளம்பெற,
குறைவிலா சந்ததி வாழ,
வானளா விருட்சங்கள்
நடுக நாடெலாம்.


## அறிவித்தல்

திரு. ஏ. எம். பாறூக், முன்னேற்றம் புத்தகசாலை, மெயின் வீதி. சாந்தமருது-3 என்னும் விலாசதாரரை, எமது 'ஈழநாடு' பத்திரிகையின் விற்பனையாளராக சாய்ந்த மருது பகுதிக்கு நியமித்துள்ளோம் என்பதை எமது வாசக நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஒருவர் தெரிவித்தார் இம்மாதம் 25-ம் திகதிவரை கல்லூரிகளிலும், அடுத்த மாதம் 2-ந் திகதிவரை பொதுமக்கள் மத்தியிலும் கொடிகள் விற்பனைசெய்யப்படும்.

கொடி நிதி விற்பனைக்கென கிளிநொச்சி, ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, உடுவில், கோப்பாய், பருத்தித்துறை, உடுப்பிட்டி யாழ்ப்பாணம், நல்லூர், வட்டுக்கோட்டை, காரை நகர் ஆகிய இடங்களில் குழுககளுப் தெரியப்பட்டுள்ளன.

### உள்ளூராட்சி மன்றங்களுக்கு அழைப்பு

ஜூன் 29-ம் திகதி நடைபெறவிருக்கும் நாவலர் பெருமான் திருவுருவச்சிலைத் திறப்புவிழாவுக்கு முன்னர் அவ்வுருவச்சிலையை ஜூன் 26-ம் திகதி தொடக்கம், 28-ம் திகதி வரை வடமாகாணத்தின் பிரதான பட்டினங்கள், கிராமங்கள் ஊடாக ஊர்வலமாகக் கொண்டு செல்லப்படும் இதற்குப் பொதுமக்களும் உள்ளூராட்சி மன்றங்களும் ஆதரவையம்ஒத்துழைப்பையும் அளிக்க முன்வரவேண்டும்.

நாவலர் சபைப் பொதுச் செயலாளரான திரு. எம். ஸ்ரீகாந்தாவும், விழா இணைப்பு அலுவலாளர்களான த. முருகேசம்பிள்ளை, கே. முருகேசம்பிள்ளை, யாழ். மாவட்ட ஊர்வல அமைப்பாளர் திரு. அ. அ. ஜோசெப் ஆகியோர் வடமாகாணத்திலுள்ள சகல ஊள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பிவைத்துள்ள வேண்டுகோள்ஒன்றில் தெரிவித்துள்ளார்.

நாவலர் விழா இறுதி நிகழ்ச்சிகள், வடமாகாண ஊர்வலப்பாதைகள் இன்னமும் முடிவு செய்யப்படவில்லையென்றும், இன்றே நாளையோ இவைமுடிவு செய்யப்பபட்டுவிடும் என்று விழா இணைப்பாளரான திரு. கே தனபாலசிங்கம் தெரிவித்தார்.

நாவலர் விழா சம்பந்தமான பத்திரிகை பொதுமக்கள் அலுவலராகவும், முழு நேர ஊழியராகவும் திரு. வி. வி. இராஜேந்திரம் யாழ்ப்பாணம் மெய்கண்டான் கட்டடத்தில் கடமையாற்றிவருகின்றூர்.

திகளின் கடமையை இலகுவாக்குகிறது. 25-ந் தேதிக்குமுன் ரேஸ்ரர் போடப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது, துவிசக்கரவண்டிகள் நிற்பாட்டுவதற்கு தகுந்த இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

நுளம்பு மூட்டைப்பூச்சி தொலலைகளைக் குறைப்பதற்கு ஆவன செய்யப்படுகின்றன. முதலுதவி உபகரணங்கள் கூடிய விரைவில கொடுக்கப்படும்

பிரவேசச்சீட்டுவாங்காமல வேண்டுமென்றே ஏமாற்றும் நோக்கத்துடன் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் மீது தெண்டம் விதிக்கும்படி எலலா திடீர் பரிசோதனையாளர்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2-5-69ல குருநகரில பஸ் ஊழியர்கள் தாக்கப்பட்டதற்கு தகுந்த சாட்சியம் இலலாத பட்சத்தில பொலிசாரால மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியவிலலை. கோல உடை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

—

### மானிப்பாய் அந்தோனியார் திருநாள்

யாழ்ப்பாணம், வியா.

மானிப்பாய் அர்ச். அந்தோனியார் திருநாள் இம்மாதம் 13-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. நவநாள் ஆராதனைகளின்பின் இம்மாதம்

எடுக்குமென்று நம்புவோம்.

0 0 0

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபையினர் ஒன்பதாவது ஆண்டு கணக்கு விவர அறிக்கையை வழக்கம்போல் குறித்த காலத்தில் வெளியிட்டிருக்கிறுர்கள். வருடத்துக்கு வருடம் இந்ததர்மம் வளர்ந்தோங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது.

புதிய அன்னதான மண்டபத்துக்கு 'அமுதசுரபி' என்ற மிகப்பொருத்தமான பெயரை வைத்துள்ளனர். இம் மண்டபவேலை பூர்த்தியாக, பொருளுதவி தேவையென்றும், அன்பர்கள் உதவிஞல், பத்தாவது வயதிலே பூரண பொலிவுடன் விளங்கி தினமும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குமென சபையின் இணைக்காரியதரிசிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

மேலான இந்த தர்மத்தை வெற்றியுடன் நடத்திவரும் இச் சபையினரையும், இதற்கு உதவிவரும் அன்பர்களையும் பாராட்டவேண்டும். தினசரி அன்னதானம் செய்து, ஊரில் யாருமே பசி பட்டினியால் அவதிப்படாமல் செய்வது, மற்ற

22-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு பாடற்பூஜையுடனும்அதைத் தொடர்ந்து திருச்சுரூப ஊர்வலத்துடனும் முடிவடையும். யாத்திரீகர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விழாவில் திரு எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர், திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணுதேசிகர், கலையரசு சொர்ணலிங்கம், இசைப்புலவர் எம். சண்முகரத்தினம், பரம் எஸ். தில்லைராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சம்மாந்துறை ப.ச.வளவினுள் தொழுவம்

சாய்ந்தமருது, புதன்

சம்மாந்துறைப் பட்டின சபை வளவினுள், மாடுகள் கட்டுவதற்கு ஒருதொழுவம் அமைக்கப்படும் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் இங்கிருந்தே எடுத்துச் செல்லப்படவேண்டும். கள்ளத் தனமாக மாடுகள் வெட்டுவதைத் தடை செய்யுமுகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருக்கிறது.

இதற்கான யோசனையை சபைத் தலைவர் ஜனுப் எம். இஸட்கமால் கொண்டு வந்தார். பிரேரணை நிறைவேறியது.

தொடர்ந்து பல வருடகாலமாகப் பட்டின சபையின் கீழ் கடமையாற்றிவரும் தற்காலிக தொழிலாளரை நிரந்தரமாக்கு வதோடு, வருடமொன்றுக்கு இருவருக்கு சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவேண்டும் என்னும் தீர்மான முட்படப் பல தீர்மானங்கள் சபையில் நிறைவேற்றப்பட்டன.

### கணவன் பொலிஸ் நிலையத்தில் இருக்க

# வீட்டிலிருந்த மனைவியுடன் தகாத முறையில் நடக்கஎத்தனித்தாராம்

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் மீது விசாரணை

யாழ்ப்பாணம், வியாழன்

புகார் செய்யப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற கணவன் ஒருவரை பொலிஸ் நிலையத்தில் இருக்கச்செய்து விட்டு, அவரது வீட்டுக்குச் சென்று தனிமையிலிருந்த அவரது மனைவியுடன் தகாத முறையில் நடந்துகொள்ள எத்தனித்தாராம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர்.

மன்னூரில் நடைபெற்ற இச் சம்பவம்பற்றி மன்னூர் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. குணவர்த்தன முழுவிசாரணை ஒன்றை நடத்திவருகின்றூர்.

மன்னூரில் கடமையாற்றும் குறிப்பிட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் வேறு இரு கான்ஸ்டபிள்களுடன் குறிப்பிட்ட பெண்ணின் வீட்டுக்குச் சென்று அவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாக வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டனுக்குச் . செய்யப்பட்ட புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் குறிப்பிட்ட பெண்ணின் கணவன் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்ததாகவும் இப்புகாரில் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட இரு கான்ஸ்டபிள்களையும் அடையாளம் காண்பதற்கான அடையாள அணிவகுப் பொன்றும் இன்று மன்னூர் பொலிஸ் நிலையத்தில் நடைபெறவிருக்கின்றது.

விசாரணையின் முழு அறிக்கையொன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் இன்று அனுப்பி வைக்கப்பட விருக்கின்றது. (கா. நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org